# செந்தமிழ்ச்செல்வி

௨௫ ★ வள்ளுவர் ஆண்டு ௧௯௮௨ வைகாசி, (June, 1951) ★ பரல் ௧௦

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| தமிழ் வளர்ச்சிக் கழகம் நான்காவது ஆண்டு விழா —கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை | ௪௪௧ |
| மதிப்புரை மறுப்பு—ஞா. தேவநேயன் | ௪௫௭ |
| முத்தமிழ் —பன்மொழிப்புலவர், கா. அப்பாதுரை எம்.ஏ. எல்.டி. | ௪௬௫ |
| நெருஞ்சி —செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை | ௪௬௯ |
| இது தகுமோ?—புதுவை. முருகண்ணன் | ௪௭௪ |
| மனோன்மணீயம்—தமிழாசிரியர் A. மகாலிங்கம் | ௪௭௫ |
| சங்க இலக்கியங்களில் இல்லையா? —சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, B.O.L., மயிலம் | ௪௮௧ |
| அன்னையின் ஆணை—முத்தமிழ் மணி | ௪௮௭ |
| உடையார்கோவில் கல்வெட்டுக்கள் —வித்துவான் வை. சுந்தரரேச வாண்டையார் | ௪௮௯ |
| தமிழனும் நீ கோலோ?—நாஞ்சில் கா. கணபதி | ௪௯௩ |
| செய்திகளும் குறிப்புகளும் | ௪௯௪ |


B.A. (தமிழ்) M.A. (வரலாறு) ... LITT. DIP. IN LINGS

திருநெல்வேலித், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
140. பிராட்வே, சென்னை-1.

# ‘செந்தமிழ்ச் செல்வி’

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. ,, மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

உ. ,, ‘சித்தாந்த கலாநிதி’ வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

ச. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்

ரு. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள்,
B.O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

சு. ,, வித்துவான், பண்டிதர், கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஓ. எல்.
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

எ. ,, ‘சித்தாந்த பண்டிதர்’ ப. இராமநாத பிள்ளை அவர்கள்,
கழகப்புலமையாளர்.

---

# கழகப் புதிய வெளியீடுகள்


## நல்வாழ்வுக் கட்டுரைகள்

### ஆசிரியர் கா. அப்பாத்துரைப் பிள்ளை அவர்கள்

அறிவியல், தத்துவம், பொருளியல் போன்ற பல்வகை வாழ்க்கைத் துறைகளிலும் மேன்மையடைந்துள்ள மேனாட்டு மக்கள், வாழ்வில் வளம்பெற்றுப் பிறநாட்டினார்க்கும் வழிகாட்டு பவராக அமைந்துள்ளனர். நம் தமிழக இளைஞரும் அங்ஙனமே உயர்நிலையடைய வேண்டுமென்னும் ஒரே குறிக்கோளுடன் இந் நூல் கருத்துச்செறிவும் பொருட்செறிவும் அமையப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது.

இஃது உவில்லியம் காபெட் என்னும் மேனாட்டு அறிஞரின் அறிவுரைகளைத் தழுவித் தமிழர் காலத்துக்கேற்பச் செப்பமுற அமைந்துள்ள விழுமிய நூலாகும். மணமக்கட்கும், பிறர்க்கும் பரிசிலாக வழங்குவதற்கு ஏற்ற முறையில் கவினுற மூவண்ண மேலட்டையுடன் அச்சிடப்பெற்றுள்ளது.

மலிவுப் பதிப்பு ரூ. 1—12—0 உயரிய பதிப்பு ரூ. 2—8—0




சிலம்பு ௨௫ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௨, வைகாசி ஜூன், 1951 | பரல் ௧0

## தமிழ் வளர்ச்சிக் கழக

# நான்காவதாண்டுவிழா

[கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை.]

**தொன்மை**

முத்தமிழும் இத்தரையில் - இவ்வுலகில் பண்டுபோல் 'ஞால மளந்த மேன்மை' எய்த வேண்டுமானால் இத்தகைய கழகங்கள் பற்பல தோன்றிப் பல்லாற்றானும் பயனுடைய அருஞ் செயல்கள் ஆற்றி நின்று நிலவி மிளிரவேண்டும். இந்நாள் ஆட்சி வலுவால் ஆங்கிலம் உலகெங்கணும் பரவியுள்ளது. இருக்கு மொழிகள் எல்லாவற்றினும் தொன்மையும், இனிமையும், மென்மையும், தனித்தியங்கும் வன்மையும் வாய்ந்த நம் செந்தமிழ் மொழியும் கிட்டத்தட்ட உலகின் பல பாகங்களில் அம்மொழிக் குரியாரின் உண்மை யன்பினால் நின்று நிலவுகின்றது.

கடல் கடந்த நாடுகள் பலவற்றிலும் தமிழார்வம் மிக்கார் பலர் வாழ்கின்றனர் சிறப்பாக இலங்கை, பர்மா, மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்கள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள்ளும் இலங்கையே மிக அண்மையிலுள்ளது. இலங்கையுள்ளும் ஈழநாடே தூயதமிழ் பேணும வாய்மை வளங்கொண்டது. தொன்றுதொட்டே புலவர்பெருமக்கள் மிகுதியாக வாழும் சிறப்பினது. அப்புலவர் பெருமக்களுள் பலரும் நம் தென்னாடு போந்து மன்னிய சிறப்பும், பொன்னும் பெற்றுத் திகழ்ந்தனர்—திகழ்கின்றனர்—திகழ்வர். வேற்றுப் புல மாண்பில் மன்னவர்களால் பேரிடர் உற்றகாலத்தும் செந்தமிழையும் செந்நெறியையும் கைவிடாது பேணிவந்த சிறப்பு ஈழநாட்டுக்கு உரியது. இவ்வுண்மை என்றும் மறக்கற்பாலதன்று.

தொடர்பு

தமிழ் வளர்ச்சிக் கழக ஆண்டுவிழா, தமிழ்நாட்டின் சிறந்த தலைநகரங்களில் ஆண்டுதோறும் அணிதிகழ நிகழ்ந்து வருவது போற்றற்குரியதே. இக்கழகம் 1946-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 17-ஆம் நாள் திரு. தி சு. அவிநாசிலிங்கம் செட்டியார் நன்முயற்சியால் தொடங்கப்பெற்றது. தமிழ், தக்கவாறு வளர வேண்டுமானால் அறிவியல் உளமெய் முதலிய பல துறைகளில் உரைநடை நூல்கள் பல்கவேண்டும். அந்நூல்களை ஆக்கித்தரும் புலமையும் போற்றும் ஒழுக்கமும் ஆற்றலும் நிறைந்த ஆசிரியர்களை வல்லவாறெல்லாம் ஊக்கவேண்டும். அதுவே இக்கழகத்தின் தலைசிறந்த நோக்கமாகும்.

இக்கழகத்தார் மொழிபேணும் வகையில் விழியென வகுத்துள்ள வகுப்புக்களை அங்ஙனமே தருகின்றோம்.

"க. கவிதை, இசைப்பாடல். உ. கணிதம், வானநூல், பொறியியல். ங. சிறுவர் இலக்கியம். ச. வைத்தியம், சுகாதாரம். ரு. கல்வி, தத்துவம், மனத்தத்துவம். சு. இயற்கைநூல், விவசாயம். எ. சிறுகதை. அ. நாவல், நாடகம். கூ. ஆராய்ச்சி. கo. கட்டுரை. கக. சரித்திரம், பொருளியல், அரசியல். கஉ. பௌதிகம், இரசாயனம்" என்பன.

இவற்றில் முதல் ஆறு பகுதிகள் ஒரு ஆண்டிலும் அடுத்த ஆறு பகுதிகள் மறு ஆண்டிலும் ஆக ஆய்வுக்கு எடுத்துத் தக்க நடுவர் ஐவர்களால் சிறந்ததெனத் தீர்மானிக்கப்படும் நூல் பரிசுக்குத் தகுதியாகும். பரிசுப்பொன் ஐந்நூறு (500) வெண்பொன் ஆகும் அத்துடன் பாராட்டிதழும் அளிக்கப்பெறும். ஆய்ந்தெடுத்த நூலினை அடுத்து நிற்கும் நூறகளுக்குப் பாராட்டிதழ்கள் வழங்கப்பெறுகின்றன — பரிசுப பொன்னைச் சென்னை அரசியலார் அன்புடன் உதவ ஏற்றுக்கொண்டுள்ளமை பெரிதும் போற்றுதற்குரியது

இக்கழகம் வேறொரு முதன்மைப் பணியையும் மேற்கொண்டுள்ளது. அதுவே பல்பொருளகராதிப (Encyclopaedia) பயன் நூலாகும். இப்பணியை நம்நாடு விடுதலை எய்தி சிறப்பெற்ற 1947 ஆகஸ்டு 15-ஆம் நாளாகிய பொன்னாளில் முன்னாள் கல்வி அமைச்சர் திரு. தி. சு அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் 'கலைக்களஞ்சியம்' என்னும் பெயருடன் அரசியலார், பெருமக்கள் முதலாயினார் ஆதரவுடன் தொடங்கியுள்ளார்கள். இஃது ஒன்பதினாயிரம பக்கங்கள் கொண்ட பெருநூலாகவரும், பன்னிரண்டு தொகுதிகளாக அமைந்திருக்கும் பதினைந்து நூறாயிரம் வெண்பொன் செலவாகும். கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளில் நிறைவுறலாகும். இதைப் பதிப்பிடல் ஆய்தல் முதலியவற்றிற்குத் திரு. டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலி

யார் அவர்கள், டாக்டர். கே. எஸ். கிருஷ்ணன் முதலிய பேரறிஞர்களைக்கொண்ட பதிப்பாசிரியர் கழகம் ஒன்று நிறுவப்பெற்றுள்ளது. அறிஞர்கள் பலரைக்கொண்டு பல்வேறு துறைகளில் கட்டுரைகள் எழுதச்செய்யவும், அவற்றை ஆயவும் முப்பதுக்கு மேற்பட்ட செயற்குழுவினர் முன்வந்துளர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் இதற்கோர் அலுவலிடமும் அமைந்துள்ளது.

இக்கழகத்தின் முதலாண்டுவிழா பாண்டிநாட்டில் சங்கமிருந்து தமிழாராய்ந்த கூடலம்பதியாம் மதுரையின்கண்ணும், இரண்டாவது விழா முடிவிலா அடியார் சீரும சிறப்பும் விளங்குவதற்கிடனாயிருந்த சோழநாட்டின் தலைநகராகிய திருவாரூரின் கண்ணும், மூன்றாவதுவிழா பெரும்பாலும் சேரநாட்டின் சார்பாம் கொங்குநாட்டின் தலைநகராகிய கோயமுத்தூரின்கண்ணும் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தமை யாவரும் அறிந்ததொன்றே.

நான்காவது ஆண்டுவிழா முந்நீர்ப் பிரிவால் நாடு வேறாயினும் மொழி, நடை, முன்னம் முதலியவற்றால் பன்னெடுங் காலமாகியும் மாறுதலெய்தாது அன்று போலின்றும் விளக்கமுற்றுத் திகழும நாடு - நற்றமிழ்நாடு ஈழநாடாகும். அந்நாட்டகத்துப் பெருஞ்செல்வமும், பெரும்புலமையும், பேரன்பும் வாய்க்கப்பெற்ற பெருமக்களால் அழைக்கப்பெற்று இந்நாள் நிகழ்கின்றது. இவர்களுள் முன்னணியில் நின்று பெரிதும் உழைத்து விழாவின் வெற்றிக்காக வேண்டுவ செய்து போந்த விழுத்தகை நல்லார் கௌரவ திரு கனகரத்தினம் (கல்வி மந்திரி) அவர்கள் ஆவர்.

**விழா**

இவ்விழா, 1951 ஏப்பிரல் 29, 30, மே 1-ஆம் நாட்களில் பரமேசுரக் கல்லூரியில் சிறப்புற நிகழ்ந்தது. சர். இராமநாதன் நிறுவி எழில்பெற நிகழ்ந்துவரும் கல்லூரிகள் இரண்டு. அவை, இராமநாதன் கல்லூரி, பரமேசுவரன் கல்லூரி என்ப. **இராமநாதன் கல்லூரி** பெண்பாலார்களுக்கு. **பரமேசுரன் கல்லூரி** ஆண்பாலார்களுக்கு. திரு. இராமநாதன் நாட்டுக்கும மொழிக்கும் செய்துள்ள தொண்டுகள் அளப்பில. அவற்றால் இலங்கைமண்டிலம் எய்திய எழிலும் வளமும் எண்ணில. அம்மட்டோ 'காடவர்கோன் கற்றிருப்பணி' எடுத்ததொப்ப கொழும்பு, கொச்சிக்கடை "**பொன்னம்பல வாணேசுரம்**" என்னும் சிவபெருமான் திருக்கோயிலைத் தம்தனி முயற்சியால் கருங்கற்றிருப்பணியாகக் கட்டிமுடித்துள்ளார்கள். பின்னுள்ளார் சிறுமுயற்சியும் முன்னுள்ளார் பெருமுயற்சியுடன் சேர்ந்தாலன்றி அவ்விழைவு அழகுறுதென்பது ஒருதலை. அது

திருக்கோவில், தேர், திருவிழா, கல்லூரி முதலியவைகளை முன்னுள்ளார் பெரும்பொருட்செலவில் பீடுற அமைத்து வேண்டும் எய்ப்பில் வைப்பும் இனிதுறச் சேர்த்துவைக்கின்றார்கள். அவற்றைப் பின்னுள்ளார் அறநிலைக் காவலராய் அன்புழைப்பாளராய் இன்புறும் இயல்பினராய் இயைந்தவை செய்து பேணுவிடின் என்னும்! தேரமைத்தார் செயல் தேரிழுப்பார் சிறப்பில் திகழ்கின்றதன்றோ? அதுபோல—திரு. இராமநாதன் அவர்கள் திருக்கோவில் திருப்பணியும் வடபாற்பகுதி அக்கோவில் அறநிலைக்காப்பாளராகிய சர். அருணாசலமகாதேவர் அவர்களால் முற்றுற்றுத் திகழவேண்டிய நிலையில் இருக்கின்றது. இறைவன் திருவருளால் அவர்கள் அதனை விரைவில் நிறைவுறுத்திக் கடமையை ஆற்றிக் கவினுறச் செய்வார்களென நம்புகின்றோம்.

திரு. இராமநாதன் அவர்களின் நூற்றாண்டுவிழா 28-4-51 சனிக்கிழமை மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவுக்குச் சென்னை மேனிலை முறைமன்றத்து முதல் நடுவூர் திரு. பி. வி. இராசமன்னார் அவர்கள் தலைமை பூண்டார்கள். "நாட்டுப்பெரியார் வாழ்க்கையின் நல்வரலாறே அந்நாட்டு உண்மை வாழ்க்கையாம்" என்னும் உரைப்படி இலங்கையின் அண்மை வரலாறு திண்மை இராமநாதன் வரலாறேயாகும்.

**முதல் நாள்**

29-4-51 ஞாயிற்றுக்கிழமை காலை விழா தொடங்கப்பெற்றது ஏட்டுச் சுவடிகள் அடங்கிய செந்தமிழ்த் திருமுறைகள் பொன்னோடைக் களியானை மன்னெருத்தமீதமர்த்தி ஊர்வலம் தொடங்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் நிறுவப்பெற்று இன்றுகாறும் சீருற நடந்துவரும் 'சைவப்பிரகாச வித்தியாசாலை' யிலிருந்து தொடங்கப்பெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கட் குழுவினர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலமும் இன்னிசை முழக்குடன் பண்ணரிய ஆர்வக்கூரலுடன் ஒவ்வொருவரும் தம்மக விழாவெனும் சால்புடன் ஒருங்குவர நிகழ்ந்தது.

வரவேற்புக் குழுத் தலைவர் திரு. நடேசபிள்ளை அவர்களால் கல்லூரிக்கண் யாவரும் வியப்புற ஊர்வலம் வரவேற்கப்பட்டது. இவர்களே பரமேசுரக் கல்லூரித் தலைவருமாவர். இவர்கள் விழாவுக்கு வந்த தென்னாட்டவர், தென்னாப்பிரிக்கா, மலேயா முதலிய பொன்னாட்டவர்கள் யாவர்களையும் வானவூர்தி நிலையமாம் காங்கேசன் துறையிலும் தங்கு நிலையமாம் கல்லூரி முதலிய இல்லங்களிலும் சிறப்புற வரவேற்றார்கள்.

தமிழர் பண்பாட்டின்படி 'நிறைகுடம் நிறைவிளக்கு பூமாலை பொன்மாலை பாமாலை' முதலிய சிறப்புக்கள் வரவேற்பில் காணப்பட்டன. இவை முறையே ஆற்றல் அறிவு அன்பு முதலியவற்றின் வற்ரு ஊற்றுக்கள் என்பதைக் காட்டுவனவாம.

"ஆற்றல் நிறைகுடமாம் அன்புபூ மாலைமுதல்
போற்றறிவு சால்விளக்காம் போற்று."

என்பதன் உருவகமாகவும் கொள்க. திரு. நடேசபிள்ளையவர்களுடன் ஒத்து வரவேற்பாற்றிய ஒண்மையர் திரு ஈழகேசரி இராசஅரியரத்தினம் முதலியோராவர். வாணூர்தித் துறையினின்று நகர் பதினொன்றரைக்கல் இருக்கின்றது. ஆண்டாண்டும் மக்கள் சிறப்புச்செய்து ஆர்வமுடன் வரவேற்றனர். யாழ்ப்பாணம் வழிநடைக் குறிப்பு ஒன்று யாவர்க்கும வழங்கப்பெற்றது. இந்நூல் திரு. இராச அரியரததினம் அவர்களால் வெளியிடப்பெற்றது. இது பாராட்டததக்கதும் பயன் பெரிதுடையதும் பண்பாடு நிறைந்ததுமா யமைந்தது ஒருவர் யாழ்ப்பாணத்தைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டிய இன்றியமையாத பல செய்திகளும், காணத்தக்க பல இடங்களின் குறிப்புக்களும இந்நூலில் இனிமையும் எளிமையும் தெளிவுமுற விளக்கப்பட்டுள்ளன.

திரு. நடேசபிள்ளையவர்கள் 28-4-51 சனிக்கிழமையன்றே தமிழ்க் கொடியை ஏற்றுவித்தார்கள். அதன்கண் முடியுடை மூவேந்தரின் மூவாக்குறியாகிய வில் புலி மீன் விளக்கமுறப் பொறிக்கப்பெற்றிருந்தன. அத்துடன் யாழும் பொறிக்கப்பெற்றிருந்தது. மூவேந்தர் கொடியும் முறையே அறம் பொருள் இன்ப அமைப்பெனக் கூறலாம். அம்மூன்றன் பயன் யாவரையும் யாழெழீஇ 'அளப்பில கீதஞ்சொல்லி' ஆண்டவன் நினைவகலாது அம்மூன்றன்கண்ணும் உய்ந்து நிறைவாழ்வோடு இன்புறச் செய்தலேயாம். அதுவே வீடென்ப. அக்குறிப்பே யாழுடன் பொறித்தமைத்த அருமையாகும். எனவே தமிழ் வளர்ச்சிக் கழக நான்காவது யாண்டில் தமிழ்க் கொடி நாற்பொருள் பயக்கும் குறிப்புடன் நாட்டப்பெற்றது நாயன்தன் நல்லருளேயாம். இதனை யாவருங் கண்டு இறும்பூதெய்தினர்.

யாழ்நூலுக்கே வாழ்நாளெல்லாம் உழைத்து வளம்பெறச் செய்த வள்ளல் விபுலானந்த அடிகளாரின் திருப்பெயர் பந்தலுக்குச் சூட்டப்பெற்றிருந்தது பொருத்தமேயாம். அடிகள் அன்பறிவு நிறைந்தவர்; ஆற்றல் மிக்கவர்; குழந்தையுள்ளம் படைத்தவர்; குறுஞ்சிரிப்பும் நெடுநினைவும் பேரடக்கமும் நேரணியாப்பூண்ட சீர்மையர்.

திருநாவுக்கரசு நாயனார் பாடி அருளிய "நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி" என்னும் சொற்பொருள் செறிந்த திருநெறித் தமிழுடன் விழாத் துவங்கப்பெற்றது. உற்று நோக்குவார்க்குப் பெற்றமூர்ந்த பெருமானும், நற்றிறம்படரும் திருநெறியும், மற்றதன் திருமுறையும் தொன்மைத் தமிழர் பொதுநெறிக்குரிய பொருள்களேயாகும்.

ஆயிரக்கணக்கான தமிழ நன்மக்கள் இருபாலாரும் பொருவரிய ஆர்வத்துடன் புலமைமிக்கார் புகலும் போற்றற்கரிய பொன்மொழிகளாம் நன்மொழிகளை உளங்கொள ஏற்று வளமுறவாழ வந்து குழுமினர். இம்மாபெருங் கூட்டத்துக்கு நிகராகிய கூட்டம் எக்காலத்தும் எந்தஇடத்தும் இலங்கைக் கண் கூடியதைக் கண்டதுமின்று கண்டார்வாய்க் கேட்டதுமின்று எனக் களிப்புடன் பகர்ந்தனர்.

**முதன்மையர்**

விழாக்காண விழைந்து வந்துள்ள விழுத்தகு முதன்மையர் பல்லோருள்ளும் ஒருசிலரை இங்குக் குறிப்பிடுகின்றேன்.

"இலங்கை அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர், சென்னை மேனிலை முறைமன்ற முதல் நடுவர், இந்திய உரிமைபெற்ற ஆட்சி முதன்மையர் (High Commissioner), இலங்கை இந்திய காங்கிரசுத் தலைவர் கே. இராசலிங்கம் அவர்கள், யாழ்ப்பாண நகராண்மைக் கழக முதன்மையர் (Mayor) திரு. பொன்னம்பலம் அவர்களும் பிறரும் ஆவர். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பாரதநாட்டினர் பலரும் வந்தனர். தென்னாப்பிரிக்காவிலிருந்தும் மலேயாவிலிருந்தும் அவ்வந்நாட்டு அருந்தமிழ்மக்கள் பல்லோராலும் ஒருங்கு தெரிந்தெடுக்கப்பெற்ற மூப்பர் (Delegate) சில்லோரும், அங்ஙனமே தமிழ்நாட்டிலிருந்து ஐந்நூறுக்கு (500) மேல் வந்துள்ள மூப்பர் பல்லோரும் அமர்ந்திருந்தனர்."

**வரவேற்பும் திறப்பும்**

இருமொழிப் புலமையும், பெருநிலக்கிழமையும், ஆட்சித் திறனும், சூழ்ச்சி மாட்சியும், துணிவும், பணிவும், தூய்மையும், வாய்மையும், கனிவும், இனிமையும், காட்சிக்கெளிமையும், உருவும திருவும் ஒருங்கமைந்த திரு. நடேச பிள்ளையவர்கள் அமைந்த தெளிவான இன்குரலில் நல்வரவு கூறினார்கள். விழாத் திறப்புத் தலைவர் திரு. சர். ஆர். கே சண்முகம் செட்டியாரவர்கள் வரும் வாய்ப்பு எய்தப் பெறாமையால் அவர்களுக்கு

ஈடாக அவர்கள் திருத்தொண்டை திரு அறிவியல் ஞாயிறு சர். கே. எஸ் கிருட்டினன் அவர்கள் நிறைவேற்றிவைத்தார் கள்.

**கலைக் காட்சி**

இலங்கையின் பாதுகாப்புக்கு என்றும் மாறு நிரந்தரச் செயலராம் காரியதரிசி சர். கந்தையா வைத்தியநாதன் அவர் கள் கலைக்காட்சியைத் திறந்துவைத்தார்கள் அவர்கள் விரி வுரையின் சுருக்கம், செம்மை சான்ற மும்மைத் தமிழரின் கலை கள் ஐம்புலனுகர்ச்சியொன்றே கொண்டு தம் புலங்கெட்டுப் பெருவாழ்வு எய்தாது மீட்டும் பிறந்து தாழ்வுறுதற்கன்று. புலனுகர்ச்சியோடு 'மண்ணினல்ல வண்ணம் வாழ்ந்து' விண்ணவர்க்கும் கிட்டா விழுப்பேறெய்தி வீடுறுதற்கேயாம்; அதனாலேயே நம் தொன்மைத் தமிழர் இசை, நாடகம், சிற்பம், காவியம், ஓவியம், முதலிய எல்லாக் கலைகளுக்கும் திருக்கோவில் களிலேயே தக்க இடம் அமைத்திருந்தனர் [திருக்கோவி லொன்றே வேந்தரை யுள்ளிட்டு மக்களெல்லாரும் ஆண்டவன் அன்புறு சரிநிகர் பிள்ளைகள் என்பதைக் காட்டும் திரு இடம்] என்பதே.

கலைக்காட்சி இதற்குமுன் நிகழ்ந்த விழாக்களில் இடம்பெற வில்லை. இது யாழ்ப்பாணத்துக்கே அமைந்த ஏற்றமிகு சிறப் பாகும். இக்காட்சி காலவரையறைக் கணக்கின்படி வகுத்துக் காட்டப்பட்டிருந்தது. திருக்கோவில்கள் பல, பல்வேறு உறுப் புக்களுந் தெளிவுறப் புலனாகப் படம் அமைத்துக் காட்டப்பெற் றிருந்தன. ஆறுமுகநாவலர் போன்ற மேலவரும அஞ்சும் காவலர் போற்றும் பாவலர் பலரின் கையெழுத்துப் படிகள் பல பாங்குற வைக்கப்பெற்றிருந்தன. தமிழ் எழுத்துக்கள் தோன்றி வளர்ச்சியுற்ற முறையும் நன்றாக வண்ணித்துக் காட்டப்பட் டிருந்தது. தமிழ்க் கீழ்வாய் எண்கள் (பின்னங்கள்) அடங்கிய அட்டைகள் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்பெறும் முறை யில் அமைக்கப்பட்டிருந்தன. இக் காட்சிகள் கலைகளைக் கலை ஞர்களை ஆதரிக்கும் சீரிய முறையாகும். இக் காட்சியை எழி லுற அமைத்துத் தந்த பெரும் பொறுப்பினர் திரு. வி. எம் நரசிம்மன் அவர்கள் ஆவார்கள்

**தலைவர்**

விழாத் தலைவர் சுதேசமித்திரன் ஆசிரியர் சி. ஆர். சீனி வாசன் அவர்களாவர். அவர்களுடைய சொற்பொழிவு செய் தித் தாள்கை அச்சுப்பொறி (Linotype)க் கமைந்தாங் கமைந் துள்ளது அவர்கள் கூறியதன் சுருக்கம், எழுத்துச் சீர்திருத் தத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுவது இன்றியமையா

தது. தமிழ் வளர்ச்சிக்குத் திரு. அவிஞசிலிங்கம் செட்டியாரவர்கள் ஆற்றிவரும் அரிய பணி பாராட்டற்குரியது புதிய நூல்கள் வெளிவருவதற்குப் பரிசும் பாராட்டும் போதா. அரசியலார் கல்விப் பரப்புக்கென ஒதுக்கிவரும் தொகையில் நூற்றுக்கு ஒரு விழுக்காடேனும் ஒதுக்கிப் பரிசுபெற்ற புத்தகங்களை வாங்கி வழங்கவேண்டும் என்பதே.

திரு கௌரவ, கனகரத்தினம் அவர்கள் (கல்வியமைச்சர்) நன்றி பாராட்டக் காலை நிகழ்ச்சி நிறைவுற்றது. இவர்களுடைய நன்முயற்சியே இவ்விழா யாழ்ப்பாணத்து நிகழக் கால்கொள்ளப்பட்டது.

பிற்பகல் நிகழ்ச்சி: சுவாமி தனிநாயகம் அவர்களும் கமால்தீன் அவாகளும இலக்கியம் வரலாறு இவற்றைப்பற்றிப் பேசினார்கள். இவ்விருவர்களும் முறையே கிறித்தவர்களும் இசுலாமியர்களுமாவர். இவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமிழை வளர்க்குமுறை பண்டைச் சமண சாக்கியர்களும, சைவ வைணவர்களும் இன்னணமே தமிழை வளர்ததிருப்பார்கள் என்பதை அங்கை நெல்லியென அனைவர்க்கும் காட்டா நிற்கும்.

**தனிநாயகம்**

அடிகள் தனிநாயகம் அவர்கள் தூத்துக்குடியில் தமிழ்ப் பணியாற்றி வருகின்றார்கள். பத்துப்பாட்டை ஆங்கிலத்தில் பாங்குற மொழிபெயர்த்துள்ளார்கள். சங்க இலக்கியங்களை வெளி நாடுகளில பரப்பியுள்ள தனிப்பெரும் பெருமையும் இவர்கட்கே உரியது இவர்கள் ஆய்ந்தாய்ந்து பார்தது அகழ்ந்தெடுத்த அரும்பெருண்மைத் தமிழ்முத்து வருமாறு:—

"இலத்தீன் சட்டமொழியானால், இததாலி காதல் மொழியானால், பிரெஞ்சு தூது மொழியானால், ஆங்கிலம வணிக மொழியானால், ஆண்டவன் அருளிரக்கத்துக்கும பூண்ட பெரும்பதிக்கும் வேண்டத் தக்க மொழியொன்றுண்டன்றோ? அதுவே நம் இருவழக்கினும் மன்னி வாழும் கன்னித் தமிழ்மொழியாகும்."

ஆழ்ந்த ஆராய்ச்சியில் தமிழர் ஈடுபடவேண்டும். 'இறைவன் என்னை இங்குப் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே'

(தொடரும்)

## 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்'

# மதிப்புரை மறுப்பு

[ஞா. தேவநேயன்]

ஈராண்டுகட்குமுன் என் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளை'ப் பற்றி 'இந்து'த்தாளில் ஒரு மருங்கு போற்றியும் ஒரு மருங்கு தூற்றியும் ஒரு மதிப்புரை வந்திருந்தது. அதை எனக்கு ஒரு நண்பர் கொண்டுவந்து காட்டினார். அதன் பின்னர்த்தான், 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்' ஒரு படி 'இந்து'ச்செய்தித் தாட்குத் திருவாளர் வ. சுப்பையாப் பிள்ளையவர்களால் மதிப்புரைக்காக விடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என ஊகிப்பால் அறிய நேர்ந்தது. எனக்குச் சொல்லாமல் விடுத்ததினால் அதை முன்னறியவில்லை. என்னைக் கேட்டிருந்தால் நான் தடுத்திருப்பேன். ஏனெனில், விளைவு முன்தெரிந்தது என்பது மட்டுமன்று, என் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளை' ஆயும் ஆற்றலுடையார் 'இந்து' நிலையத்திலாவது அந்நிலையச் சார்பிலாவது இல்லை என்பதே என் கருத்து.

மதிப்புரையைப் படித்தவுடன், "திருவாளர் சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள் தங்கள் கொள்கைக்குச் சார்பான அல்லது மாறல்லாத பகுதியைப் போற்றியும் மாறான பகுதியைத் தூற்றியும் வரைந்துள்ளார்கள்," என்று என் நண்பரிடம் சொன்னேன். அவர் உடனே "ஒரு மறுப்புரை விடுக்கவேண்டும்" என்றார். நான் அம்மதிப்புரையைப் பொருட்படுத்தாததினால் அவர் விருப்பிற்கிசையாது வாளா இருந்துவிட்டேன்.

இன்று, என் 'பாணர்கைவழி' மதிப்புரை மறுப்பைப் பார்த்தவுடன், என் நண்பர் மீண்டும் என்னிடம் ஓடிவந்து, "ஐயா! ஏனையர் இயற்றிய நூல்பற்றி யெழுந்த மதிப்புரைக்கு மட்டும் மறுப்புரை விடுத்தீர்களே! ஏன் தாங்கள் இயற்றிய 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்' மதிப்புரைக்கு இன்னும் மறுப்புரை விடுக்கவில்லை? இதனால், திருவாளர் சுப்பிரமணிய சாத்திரியாரவர்கள் வரைந்த மதிப்புரை சரியானதே யென்றும், தங்கட்கு அதை மறுக்கும் மதுகையில்லை என்றும் அல்லவா படும்?" என்று எனக்கு மானவுணர்ச்சி தோன்றுமாறு ஒருமுறை கூறியதோடமையாது திரும்பத் திரும்பச் சொல்லி வற்புறுத்தியதின் பயனாக, இம் மறுப்புரை வருகின்றதென்க.

சாத்திரியார் அவர்கள் கூற்றுக்களை எம் வழக்கம்போல் ஒவ்வொன்றாயெடுத்து மறுப்பாம்:—

1. "அந்தணர் என்பார் ஒரு குலத்தார் என்பது தொல்காப்பியத்திலேயே குறிக்கப்பெற்றுள்ளது."

அந்தணர் என்னும் பெயர் முதலாவது முனிவரை அல்லது துறவோரையே குறித்ததென, அச் சொல்லமைப்பே காட்டும்

அந்தண்மையுடையார் அந்தணர். அந்தண்மை அழகிய அருளுடைமை. ஆதலின், அந்தணராவார் அழகிய அருளுடைய முனிவர்,

"அந்தண்மை பூண்ட......அந்தணர்." (திருமந்திரம், 234)

"அந்தண் பொதியிலகத்தியனார்." (நக்கீரர்)

('பொதியில்' என்பது இங்கு இடைப்பிறவரல்.)

"அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

எனத் திருவள்ளுவர் தெள்ளத் தெளியப் பொருளுணர்த்தியதுமன்றி, இக்குறளைத் துறவோரைப் பற்றிக் கூறும் 'நீத்தார் பெருமை' யதிகாரத்தில் வைத்தது குறிப்பிடத் தக்கது.

பிங்கலத்தில், குரவரைப்பற்றிக் கூறும் ஐயர் வகையில்,

"முனிவர் மாதவர் இலிங்கிகள் முனைவர்
படிவர் உறுவர் பண்ணவர் ஐயர்
அறவோர் தபோதனர் அறிஞர் அந்தணர்
துறவோர் கடிந்தோர் மோனியர் யோகியர்
கோபங் காய்ந்தோர் நீத்தோர் மெய்யர்
தாபதர் இருடிகள் தம்பெய ராகும்."

என இருடிகள் (முனிவர்) பெயரைக் கூறும் முதற் சூத்திரத்தில் 'அந்தணர்' என்னும் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

துறவியர் சிறந்த அறவோரும் தூயோருமாதலின், அந்தணன் என்னும் பெயர் அறவோன் தூயோனையுங் குறிக்கும்.

முதன்முதலாக மக்களால் அறியப்பட்ட அருளுடையோர் முனிவரேயாயினும் உண்மையில் இறைவனே சிறந்த அருளுடையோனாதலின், அந்தணன் எனும் பேர் இறைவனையுங் குறிக்கும்.

"மணிமிடற் றந்தணன்." (அகநானூறு, கடவுள் வாழ்த்து)

"செந்தீவண்ண ரந்தணாளர்." (தேவாரம், 1816.)

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு."

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்,"

என்னுங் குறள்களாலும், 'அருளுடைமை,' 'புலான் மறுத்தல்,' 'கொல்லாமை' என்னும் அறங்களை வள்ளுவர் துறவறவியலில்

வைத்து வற்புறுத்துவதாலும், துறவறத்தின் இயல்பாலும், அந்தணர் என்னும் பெயர் துறவியர்க்கே பொருந்தும் என்பது தேற்றம்

தொல்காப்பியர், துறவியரை **அந்தணர் அறிவர் ஐயர் தாபதர்** என்னும் சொற்களாலும், கல்வித்தொழிலால் அவரோடொரு மருங்கொப்புடைய இல்லறத்தாரைப் **பார்ப்பார்** என்னும் சொல்லாலும் வேறுபடுத்திக் காட்டுவது கவனிக்கத்தக்கது:

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய," (1570)

எனத் தொல்காப்பியர் கூறும் அந்தணச் சின்னங்களே, அவர் துறவியரைச் சுட்டிக் கூறியமையை யுணர்த்தும்.

அந்தணர் என்னும் பெயர் இவ்வாறு துறவியர்க்கே யுரியதாயினும் பொருளிலக்கணத்தின் பொருட்டுப் பல்வேறு தொழில்களையும் கல்வி போர் வணிகம் கைத்தொழில் என்னும் நால்வகையுள் அடக்கி எல்லாக் குலங்களையும் நாற்பாற்படுத்துக் கூறும்போது,

'ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்,"

என்னும் விதிப்படி (தொல்காப்பியம்: 532)

உவச்சர், பூசாரியர், தேவராளர், குருக்கள், பண்டாரவர், புலவர், கணக்காயர், கணியர், வள்ளுவர், பார்ப்பார் முதலிய பல்திறக் கல்வித் தொழிலாளரும் அந்தணர் என்னும் தலைமைச் சொல்லாற் குறிக்கப்பெறுவர், அல்லது அந்தணருள் அடக்கப் பெறுவர். (இங்குக் குறிக்கப் பெற்றோரெல்லாந் தமிழ்க் குலத்தாரே.)

இதனால், அந்தணர் என்னும் பெயர் சிறுபான்மை இல்லறத்தாரான கல்வித்தொழிலாளரையுங் குறிக்கும். இங்ஙனங் குறிப்பது நூல் (செய்யுள்) வழக்கேயன்றி உலகவழக்கன்று.

ஆரிய இனத்தைச்சேர்ந்த பிராமணர் தென்னாடு (தமிழகம்) வந்து குடியேறியபோது, அவருள் துறவு அல்லது துறவொத்த நிலையிலுள்ளார் அந்தணர் என்றும், இல்லறத்தார் பார்ப்பாரென்றும், நிலையொப்புமையும் தொழிலொப்புமையும் பற்றி அழைக்கப்பட்டார். பின்பு, இனவொருமையாலும் ஆரிய வருணாசிரம தருமம் பற்றிய குலப்பிரிவினையாலும், இருசார் பிராமணரும் ஒரு சாரராகி, அந்தணர் பார்ப்பார் என நூல் வழக்கிலும், பார்ப்பார் என மட்டும் உலகவழக்கிலும், அழைக்கப்

பட்டனர். பிராமணரைமட்டும் அந்தணர் எனக் கூறும் தமிழ் நூல்களெல்லாம் பிற்காலத்தனவன்றி முற்காலத்தனவல்ல. அந்தணர் பார்ப்பார் என்னும் இருபெயரும் தூய தென் சொல்லாயிருத்தலே, அப்பெயராற் குறிக்கப்பட்ட தமிழ் வகுப்பார் அல்லது குலத்தார் தொன்றுதொட்டுத் தென்னாட்டிலிருந்து வந்தமையைப் புலப்படுத்தும். மேனாட்டினின்று வந்த ஐரோப்பியர் (ஆட்சித் தொழில்பற்றித்) துரைமார் என்னும் தமிழ் அல்லது தெலுங்கச் சொல்லாற் குறிக்கப்பட்டது போன்றே, வடநாட்டினின்று வந்த பிராமணரும் அந்தணர் அல்லது பார்ப்பார் என்னும் தமிழ்ச்சொல்லாற் குறிக்கப்பட்டனர் என்க. ஆயினும். பிராமணர் தம்மைத் தமிழரினும் உயர்ந்தவராகக் காட்டிக்கொள்வதால், தம்மைப் பிராமணர் என்னும் வடசொல்லாலன்றிப் பார்ப்பார் என்னும் தென்சொல்லாற் குறிக்க விரும்புகின்றிலர். ஆயின், தமிழ்நாட்டில் எல்லாவகையிலும் தலைமைபெற்ற முனிவரைக் குறிக்கும் ஐயர் அந்தணர் என்னும் தென் சொற்களால் தம்மைக் குறிப்பதில் பெருமையும் பெருமகிழ்வுங் கொள்கின்றனர். அதோடு, அவ்விரு தென்சொற்களையும் வடசொல்லாகக் காட்டவும் முயல்கின்றனர். இம்முயற்சியின் நோக்கம், பிராமணரே தொன்றுதொட்டுத் தமிழ் நாட்டில் ஐயரென்றும் அந்தணரென்றும் அழைக்கப் பெற்று வந்தவர் எனக் காட்டுவதேயாகும். இதனால், தமிழ் நாகரிகம் ஆரிய நாகரிகமாகக் கொள்ளப்பட்டுவிடும் என்பது கருத்து.

பிராமணர் வந்தபோதிருந்த தமிழ்ப் பார்ப்பார் பிராமணரொடு கலந்துவிட்டமையால், இன்று பார்ப்பார் என்று (வடமொழியறியாது தமிழிலேயே வழிபாடியற்றும) ஒரு தமிழக்குலத்தார் இல்லை. இங்ஙனங் கலந்துபோனமையால், பிராமணருக்குத தொகைப்பெருக்கமும் தமிழ்ப்பார்ப்பார்க்குக் குலவுயர்வும் பயன். குருக்கள் என்னும் ஒருசார் தமிழ்ப் பூசனைக் குலத்தாருள் ஒரு பகுதியினர், அண்மையிலேயே வடமொழியைக் கற்றுக்கொண்டு அதில் வழிபாடியற்றுவதன் பயனாகப் பிராமணராகியுள்ளனர் என்று சொல்லப்படுகின்றது. தூய தமிழ்க்குலத்தாரான செட்டிமார் தம்மை வைசியரென்றும், நாடார்கள் தம்மைச் சத்திரியரென்றும், வேளாளர் தம்மைச் சூத்திரர் அல்லது சற் சூத்திரர் என்றும், சொல்லிக் கொள்வது மேற்கூறியதை நன்கு விளக்கும்.

இதுகாறுங் கூறியவற்றால், அந்தணர் என்னும் சொல் முனிவரையே சிறப்பாகக் குறிக்குமென்றும், பொருளிலக்கணப் பாகுபாடுபற்றிச் சிறுபான்மை கல்வித்தொழிலைப் பொதுவாகவுடைய பல்குலத்தாரையும் சுட்டுமென்றும், ஒரு நிலையாரை

யன்றி ஒரு குலத்தாரையுந் தனிப்படச் சுட்டாதென்றும், பிராமணரை அந்தணரென்றது பிற்கால வழக்கென்றும், அறிந்து கொள்க.

2. "பத்தினி என்னும் சொல் 'பத்நீ' என்னும் வடசொல்லின் திரிபன்றி, பத்தன் (பக்தன்) என்பதன் பெண்பால் வடிவமன்று."

வடமொழியில் கணவனைக் குறிக்கும் பதி என்னும் சொல்லின் பெண்பால் வடிவமான பத்நீ என்பது, மனைவி என்று மட்டும் பொருள்படுவதே யன்றித் தமிழிற்போல் கற்புடைய மனைவியையே குறிப்பதன்று பத்தினி அல்லது பத்தினிப் பெண் என ஒரு பெண்ணைக் குறித்துத் தமிழர் சொல்லும்போதெல்லாம், கணவன் மாட்டுப்பத்தியுடையவள் என்றே கருதிச் சொல்கின்றனர் என்பதைச் சாத்திரியார் அவர்கள் அறியாதிருப்பது வருந்தத் தக்கது பத்தினி என்னும் சொல் மனைவி என்றே பொருள்படுமாயின், பத்தினிப்பெண் (மனைவிப்பெண்) என்னும் இருபெயரொட்டு வழக்கிற்கே இடமிராது இத தொடரில், பத்தினி என்பது சிறப்புப் பெயரும் பெண்என்பது பொதுப்பெயருமாகும். தெய்வத்தினிடத்தும் தெய்வத் தன்மையுள்ள அரசன் ஆசிரியன் முதலியோரிடத்தும் காட்டும் அச்சத்தோடு கூடிய அன்பு பத்தி எனப்படும் பத்தியுடையவன் பததன். பத்தியுடையவள் பத்தினி.

"குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்," "கற்புடை மனைவிக்குக் கணவனே தெய்வம்," என்னும பண்டைக் கொள்கைபற்றி, சிறந்த மனைவி கணவனிடத்தே பத்தி பூண்டொழுகினமையால், பத்தினிஎனப்பட்டாள். ஆகவே, பத்தன் என்னும் ஆண்பாற்பெயர் தெய்வபத்தி யுடையவனையும், பத்தினிஎன்னும் பெண்பாற்பெயர் கணவன் பத்தியுடையவளையும், குறிப்பனவாகும்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

என்னும் குறளும், பத்தினி என்னும் பெயர்க் காரணத்தை ஓரளவு உணர்த்தும்.

இங்ஙனம், பத்தினி என்னும் சொல் பத்தியுடையாள் என்று பகுசொற்பொருள் கொண்டிருப்பவும், அதைப் பத்நீ என்னும் வடசொல்லோடிசைத்ததற்கு, பத்திஎன்னும் சொல் பக்தி என்னும் வடசொல்லின் திரிபெனச் சாத்திரியார் அவர்கள் கொண்டமையே காரணமாகும்.

பத்தி என்னும் சொல், பற்றுஎன்பதன் மறுவடிவான பத்து என்பதினின்று திரிந்த தூய தென்சொல்லாகும்.

றகரவிரட்டை தகரவிரட்டையாகத் திரிவது இயல்பு.

எடுத்துக்காட்டு: ஒற்று—ஒத்து குற்று—குத்து

தஞ்சைமாவட்டத்தில் பொற்கொல்லரைப் பத்தர் என்பது மரபு. ஒருகால், பொன்னை நெருப்பிற் பற்றவைப்பவர் என்பது அப்பெயர்ப் பொருளாயிருக்கலாம்

"பத்துடை யடியவர்க் கெளியவன்" என்னும் திவ்வியப் பனுவல் (திருவாய்மொழி, 1, 3, 1) தொடரில், பத்து என்னும் சொல் பத்தியெனப் பொருள்பட்டது காண்க.

வயலைக் குறிக்கும் பற்று என்னும் சொல்லும் பத்து எனத் திரிந்திருப்பது கவனிக்கத்தக்கது. 'பத்தில் ஆறுபோனால் என்னவாகும்?" என்பது ஒரு விடுகதை.

பற்று என்னும் சொல் பத்தியை அல்லது அன்பைக் குறிப்பதைப்பற்றி ஒன்றும் கூறவேண்டுவதில்லை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

என்னுங் குறளே போதியதாகும்.

குற்றியலுகரவீறு இகரவீறாகத் திரிவது பெருவழக்கு

எ. டு: குச்சு—குச்சி பஞ்சு—பஞ்சி
குஞ்சு—குஞ்சி முட்டு—முட்டி

இவ்வாறே, பத்து என்னுஞ் சொல்லும் பத்தி எனத் திரிந்துள்ளது.

பழைமையான தென்சொற்கட்கெல்லாம் தென்மொழி வழியாகப் பொருள்கொள்ள வேண்டுமேயன்றி, வடமொழி வழியாகப் பொருள்கொள்ளுதல் கூடாது. அங்ஙனங் கொள்வார் இருட்டுவீட்டில் குருட்டெருமைபோல் இடர்ப்படுவது திண்ணம்.

பத்தினி என்னும் சொல்லைப் பத்நீ என்னும் சொல்லொடிணைத்ததினாலேயே, முன்னதன் பகுதி பத்து அல்லது பத்தி என்பதை உணரமுடியாமற் போயிற்று. அங்ஙனம் உணரமுடியாமையினாலேயே, பத்தன் என்னும் ஆண்பாற்பெயர் பல்கலைக்கழக அகராதியிற் குறிக்கப்பெறவில்லை.

நூற்றுக்கணக்கான தென்சொற்களை வடமொழியில் கொண்டு அவற்றை வடசொல்லாகக் காட்டுவதும், தூய தென்

சொற்கட்கும் ஒலியொப்புமைபற்றி வடசொன்மூலங் காட்டுவதும், எத்துணைநாட்குச் செல்லும்?

3. "எழுத்து என்பதன் பகுதி எழு என்பதேயன்றி எழுது என்பதன்று என்பது தொல்காப்பியத்தா லறியக் கிடக்கின்றது."

எழுத்து என்பதன் பகுதி எழு என்பதே என்று தொல்காப்பியர் ஓரிடத்துங் கூறவில்லை. எழுத்தொலியுண்டாவதைக் குறிக்குமிடத்து, 'எழுதல்' 'எழுவுதல்' முதலிய சொற்களை ஆள்கின்றாரேயன்றி எழுதுவதைக் குறிக்குமிடத்தன்று. கருது என்னும் சொல் கருத்து என இரட்டித்துத் தொழிற்பெயரும் தொழிலாகுபெயருமாவதுபோல், எழுதுஎன்னும் சொல்லும் எழுத்து என இரட்டித்துத் தொழிற்பெயரும் தொழிலாகு பெயருமாகும். வரிவடிவு ஒலிவடிவைக் குறிப்பதனாலும், பயிற்சி மிகுதியால் அது ஒலிவடிவோடொன்றியது போலத் தோன்றுவதாலும், எழுத்து என்னும் சொல் வரிவடிவைக் குறிப்பதுடன் ஆகுபெயர் முறையில் ஒலிவடிவையுங்குறிக்கும். இவ்வொலிவடிவுப் பொருளில் அஃது இருமடி யாகு பெயராகும்.

ஓவிய வரைவைக் குறிக்கும் எழுத்து (எழுதுதல்) என்னும் சொல்லே, வரிவரைவையுங் குறிக்கும், வரிவடிவும் ஒருவகை யோவியமாதலின். எழுதுதல் வரைதல்.

"Letter, Fr. *lettre*, L. *litera*, from *lino*, *litum*, to besmear, an early mode of writing being by graving the characters upon tablets smeared over with wax, என்று The Imperial Dictionary என்னும் ஆங்கில அகராதியிற் குறித்திருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

எழு என்னும் பகுதியினின்று எழும் தொழிற்பெயர், எழல், எழால், எழில், எழுதல், எழுகை எழூஉ என இருக்குமேயன்றி, எழுத்து என இருக்காது. ஆகவே, அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பதுபோல, ஒலியை நினைத்துக்கொண்டு வரியைக்குறிக்கும் பெயர்க்குப் பகுதிகூறுவது பொருந்தாது.

4. "தென்சொற்கட்குப் பொருள் விளக்கவந்த புத்தகத்திற் சில வடசொற்களும் தென்சொற்களாகக் கொள்ளப்பட்டுள்ளன."

வடசொற்களிவை தென்சொற்களிவை யென யான் அறியாமலில்லை. சில வடசொற்கள் தமிழில் வழக்கூன்றியுள்ளமை காரணமாகத் 'தன்னின முடித்தல்' என்னும் உத்திபற்றி அவற்றைத் தொடர்புடைய தென்சொற்களொடு சேர்த்துக் கூறி

யிருக்கின்றேன். அங்ஙனம் கூறப்பட்டவை இரண்டொன்றே. அவற்றை வடசொல்லென விதந்து குறித்துமிருக்கின்றேன். அங்ஙனங் குறிக்கப்படாதவை யெல்லாம் தென்சொல் லாகவே யிருக்கும். அவற்றையெல்லாம் அல்லது அவற்றுள் ஒரு பகுதியைச் சாத்திரியார் அவர்கள் வடசொல்லென மயங்கி யிருப்பார்களாயின், அது அவர்களது குற்றமேயன்றி என் குற்றமன்று.

5. " ஆசிரியர் மொழியொலி நூல் (Phonology), சொல் வடிவு நூல் (Morphology), பொருட்பாட்டு நூல் (Semasiology), ஆகியவற்றைப் பயின்றிருந்தால் நன்றாயிருந்திருக்கும்"

கடந்த இருபானாண்டுகளாக மொழிநூலில் மூழ்கிக்கிடந்த எனக்கு, மீன் குஞ்சுக்கு நீச்சுப் பயிற்றுவதுபோலும், கொல் தெருவில் குண்டூசி விற்பதுபோலும், சாத்திரியார் அவர்கள் மொழிநூல் துறைகளை யுணர்த்த விரும்பியது, மிக வியப்பை விளைக்கின்றது.

'பார்ப்பான் தமிழும் வேளாளன் கிரந்தமும் வழவழா கொழகொழா' என்பது ஒருபுறமிருக்க, வடமொழியை இயன் மொழியாகவோ, தமிழுக்கு முந்திய மொழியாகவோ கொள் பவரெல்லாம், ஒப்பியன் மொழிநூல் மாணவராதற்கும் உரியவ ரல்லர் என்பது எனது ஆய்ந்த முடிபு. செயற்கை வல்லொலி யெல்லாம் சிறந்து, பலுக்க (உச்சரிக்க) அரிதான சொல்லமைப் பெல்லாம் பெற்று, ஆசியா ஐரோப்பா ஆகிய இருபெருங் கண் டங்கட்குப் பொதுவான சொற்களையெல்லாம் தழுவி, எண் ணரு நூற்றாண்டுகளாக இடுகுறிமுறையில் வளம்படுத்தப் பட்ட வடமொழியை; இயல்பாயெழுந்து, எளியவொலி கொண்டு இளஞ்சிறாரும் ஒலிக்கும் சொல்லமைப்புப்பெற்று, மாந்தன் தோன்றிய காலந்தொட்டு மாண்பாக வளர்க்கப்பெற்ற தமி ழுக்கு முந்தியதாகவும் மூலமாகவுங் காட்டத்துணிவார்; மொழி நூற்றுறைகளில் முற்றத் துறைபோய முதுபெரும் புலவராகத் தம்மைத்தாமே மதித்துத் தருக்கின், அவருக்கு விடையாக யானொன்றும் விடுத்தற்கில்லை.

இனி, என் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளில்,' சாத்திரி யார் அவர்கள் குறிப்பிடாத இரண்டொரு குற்றங் குறைகள் உள. அவை சொற்பொருள்பற்றியவை. அவற்றை அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்வேன்.

# * முத்தமிழ்

[பன்மொழிப்புலவர், கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி.,]

முத்தமிழ்க் கவிஞர் அவர்களே! முத்தமிழ்ச் செல்வியர் செல்வர்களே!

முத்தமிழ் வளரவேண்டும் என்ற தமிழர் அவாவின் பயனாக இம்மாநாடு கூட்டப்பெற்றுள்ளது. நம் ஆர்வம் மூன்று தமிழும் வளரவேண்டும் என்பது. மூன்று தமிழ் என்பது இயல், இசை, நாடகம் என்பவை. ஆனால் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக நமக்கு இருப்பது இயல் என்ற ஒரு தமிழ் தான். இளைஞர்களும் இளமங்கையரும் தமிழன்பர்களும் மூன்று தமிழையும் வளர்க்கக் கனாக் காண்கின்றனர். ஆனால், நனவுலகிலோ ஒரு தமிழ் வாழ்வதற்குக்கூடப் பெருந்தடைகள் ஏற்பட்டுள்ளன. இருநூறாண்டுகளாக ஆங்கிலமொழி தமிழின் தோள்மீது ஏறியிருந்தது. இரண்டாயிர ஆண்டுகளாக வடமொழியும் தமிழின் கழுத்தைச் சுற்றித் தன் கால்களை இறுக்கிக்கொண்டிருக்கிறது. இப்போதோ இந்த இரண்டு தொல்லைகளும் போதாதென்று மூன்றாவது அயல்மொழியாகிய இந்தி வந்து அதன் தலைமீது உட்காரப்பார்க்கிறது. இப்போது தமிழக ஆட்சியாளரின் பேச்செல்லாம் தமிழ் தனித்து வாழ முடியுமா, அது தமிழக ஆட்சிமொழியாக இருக்கமுடியுமா என்பதல்ல; மூன்று தமிழ் வாழமுடியுமா என்பதல்ல. தமிழின் தலைமீது எந்த அயல்மொழிக்கு அல்லது எத்தனை அயல்மொழிகளுக்கு இடமுண்டு, எது முதலிடம் பெறவேண்டும் என்பதே. அரசியலிலும் கல்வித்துறையிலும் தமிழ் அடையவேண்டிய இடத்துக்கு இம்மூன்று மொழிகளும் போட்டியிட்டுத் தமிழை ஒதுக்கி அமிழ்த்திவைக்க முனைகின்றன. ஆங்கிலமுள்பட இம்மூன்று மொழியையும் விலக்கினாலன்றித் தமிழ் மூன்று தமிழாக வளரமுடியாது.

ஆனால் உலக அறிவு மொழியாகிய ஆங்கிலத்தையும் விலக்கித் தமிழ் ஆட்சிமொழியாய், அறிவுமொழியாய் வளரவேண்டுமானால், நம் ஒரு தமிழ், மூன்று தமிழாய் வளர்ந்தால் போதாது. நான்காவது தமிழாகக் கல்விக்குரிய பள்ளிப்பாடத் தமிழ் வளரவேண்டும். ஐந்தாவது தமிழாக அறிவுநூல் தமிழ் வளரவேண்டும்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டைக் கோவைமாநகரில் கூட்டியது மிகமிகப் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்.

---

* 27, 28-5-50-ல் கோவையில் நிகழ்ந்த முத்தமிழ் மாநாட்டுச் சொற்பொழிவு.

கோவைநகர் கொங்குநாட்டின் தலைநகராம். அது பாண்டி, சேர, சோழ நாடுகள் மூன்றுடனும் தொடர்புடையது. தமிழ், முருகு என்ற சொற்களைப்போலவே கொங்கு என்ற சொல் லும் இனிமை, மணம், இளமை, அழகு ஆகிய பொருள்களை உடையது. தமிழளித்த தண்பாண்டி, பண்டைப்பெருமை பேசிக்கொண்டிருக்கிறது. சோறளித்த சோழநாடு, வடமொழி ஆரியச் சூழ்ச்சியை வளர்த்து இன்று சோற்றுக்கும் தத்தளிக் கிறது. சான்றோர் நிறைந்த தொண்டைவளநாடு, பிறமொழிப் பற்றுளாழ்ந்து பிறமொழிப் பெருமையால் மண்டைக்கிறுக் கேறியுள்ளது. சேரநாடு, இன்று தமிழ்ப்பணியுடனும் தமிழுட னும் சேராத நாடாயுள்ளது. ஆகவே, தமிழரின் இளமை யார்வம் இம் மாநாட்டைக் கொங்கிளந் தமிழ்நாட்டில் துவக்கி யுள்ளது.

முத்தமிழ் என்பதற்குத் தமிழர் மூன்று தமிழ் என்றுமட் டும் பொருள் கொள்கின்றனர். தமிழ்நாட்டிற்கு வெளியி லுள்ள தமிழினத்தார் அதற்கு இன்னும் அகன்ற பொருள் கூறுகின்றனர். முத்தமிழ் என்பதை அவர்கள் முன்தமிழ் என்று பிரித்து, தமிழ் ஒரு தமிழாய்க் குறுகி வாழும் பிற் காலத்துக்கு முற்பட்ட தமிழ் எனக் கொள்கின்றனர். இதுவே மூன்று தமிழ் வளர்ந்த காலமாதலால் இரண்டு பொரு ளும் பொருத்தமே. தவிர, இலக்கியவடிவில் தமிழ் அன்று மூன்று தமிழாயிருந்தது மட்டுமன்றி, நாட்டுப்பரப்பிலும் ஒரு தமிழ்நாடா யிராமல் ஐந்து தமிழ்நாடா யிருந்தது. இன்று தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு என ஐந்து தமிழின மொழி நாடுகளாயிருப்பவை முத்தமிழ்க் காலத்தில் ஒரே தமிழகமாயிருந்தது. ஐந்து நாட்டிலுள்ள அக்கால நூல் களிலும் தாய்மொழி தமிழ் எனவே வழங்கப்பட்டது. மலை யாள நாட்டினர் இம் முத்தமிழ் நாடாகிய தென்னாடு முழுவதை யும் ஒருகுடைக்கீழ் ஆண்ட முத்தமிழ் மன்னனாகிய மாவலி மன்னன் நினைவுவிழாவை இன்றும் திருஓண விழாவாகக் கொண்டாடுகிறார்கள். பிறமொழிப் பண்பாடு புகாத அக் காலத்தில் சாதி வேறுபாடும் உயர்வு தாழ்வும் இல்லையென்பதை மலையாளிகள், "மாவலி நாடு வாணீடும் காலம், மானுஷரெல் லாரும் ஒன்னுபோலே," என்ற திருஓணப் பாட்டால் குறிக் கிறார்கள்.

முத்தமிழ் வளர்ச்சிக்கு மட்டுமன்றி அதன் இக்காலத் தேவையாகிய ஐந்தமிழ் வளர்ச்சிக்கும் அடிப்படையாவது தமி ழின் குருதியோட்டமாகிய தனித்தமிழ் வளர்ச்சியேயாகும். இரண்டாயிர ஆண்டுகளாகத் தமிழில் ஆரியர் ஆரியச் சொற்

களையும் பிறமொழிச் சொற்களையும் புகுத்தி இக் குருதியோட்டத்தைத் தடைப்படுத்தியதனுலேயே ஒரு பெருந்தமிழாயிருந்த நம் முத்தமிழ் அல்லது திராவிடமொழி ஐந்தாகப் பிளவுற்றுத் தமிழ்ப் பண்பை எதிர்க்கும் மொழிகளைத் தந்துள்ளது. இன்னும் ஆரியச் சொற்கள் கலக்கப்பட்டால் இன்றிருக்கின்ற தமிழும் பாண்டிமொழி, சோழமொழி, கொங்குமொழி எனச் சிதைந்துவிடக்கூடும். இது ஆரியர் விரும்பக்கூடிய ஒரு பிரிவினையாகவும் இருக்கலாம். தென் இந்தியாவெங்கும் கி. பி. 13-ம் நூற்றாண்டில் ஆரியர் நடத்திய மணிப்பிரவாள இயக்கத்தின் பயனுகவே பரந்த பண்டைத் தமிழகத்தின் பகுதிகளாகிய ஆந்திர மலையாள கன்னடப் பகுதிகளை இழந்தோம். இப்போதும் தமிழைக் குறுக்கித் தமிழகத்தைக் குறுக்கும் முயற்சிகள் ஆரிய ஆதிக்கத்திலிருந்துவரும் பத்திரிகை உலகிலும், பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களிலும் புதிய எழுத்தாளர் எழுத்து உலகிலும் நடந்துவருகின்றன. இத்தகையோர் ஒருபுறம் ஆரியச் சொல்லைப் புகுத்துவர். மற்றொருபுறம் தமிழ்ச்சொல்லை ஆரியம் என்று நிலைநாட்ட முயன்று தமிழரிடையிலேயே தமிழைப்பற்றிய அறிவைக்குழப்ப எண்ணுவர். இதற்கு ஒரு சான்று கூறுவோம். நிலயம், நீர், மீன், சங்கம் முதலிய தண்டமிழ்ச் சொற்களை வடமொழி கடன்பெற்றிருந்தும், அவற்றை வடசொல்லெனக் கூறும் சிலர், தம் வழக்கில் அச்சொற்களை வழங்காமல் ஸ்தாபனம், ஜலம், மத்ஸ்யம், சமிதி என்ற ஆரியச் சொற்களையே வழங்குதல் காணலாம். இஃது ஏன்? ஒன்று அவர்கள் உள்ளூற நிலயம் முதலிய சொற்கள் தமிழ்ச்சொற்கள் என்றறிந்து ஆரியச்சொல் தேடுபவர்களாய் இருக்கலாம். அல்லது தமிழ் என்று தமிழர் கூறுவதற்கிடமில்லாத ஆரியச் சொல்லை அவர்கள் தேடியலைபவர்களாகலாம். இன்று பிற இந்திய மொழிகளைத் தனித்தியங்க முடியாமல் செய்துவிட்டது போல், தமிழையும் செய்துவிட இவர்கள் கைகள் துடிக்கின்றன என்றல் மிகையன்று. பிறமொழிக் கலப்பு இன்றியமையாது வேண்டப்படுவது என்று இவர்கள் கூறுவதுகூட ஆரியக் கலப்புக்கான சாக்குப்போக்கேயன்றி வேறன்று. இல்லையானல் தனியுயர் சிறப்புடையதும் தாய்மொழியினத்தைச் சேர்ந்ததுமான தெலுங்கு முதலிய மொழிகளில் தமிழ்ச்சொல்லைச் சேர்க்க முனையாத இவ்வாரியர்கள்; ஆரியத்தையும் அது போன்ற வெளிநாட்டு வெளியின மொழிகளையும் மட்டும் தமிழ் வழக்கிற்புகுத்த இத்தனைதொலை விரைவானேன்?

இலக்கியம், இலக்கணம் என்ற சொற்கள் ஆரியமா தமிழா என்ற கேள்வி இம் மாநாட்டிலும் எழுந்துள்ளது. ஆரியர்

விதைத்த மயக்க விதையால் தமிழரிடையே ஏற்பட்டுள்ள அறிவுக்குழப்பத்தின் விளைவு இது. உண்மையில் இவை ஆரியச் சொல் என்று முற்காலங்களில் பேச முன்வந்த ஆரியர்கள் தங்கள் அகரவரிசையைத் திருப்பிப்பார்த்து அச்சொற்கள் அங்கே இல்லாதது கண்டு தங்கள் வாய்த்துடுக்கிற்கு வெட்கித் தலை குனிந்துவிட்டார்கள். வடமொழியில் லக்ஷணம் என்ற சொல் இலக்கணம் என்ற பொருளில் இன்றளவும் வழங்கவில்லை. பண்பு என்ற பொருளில் மட்டுமே வழங்குகிறது. லக்ஷ்யம் என்ற சொல்லும் இலக்கியம் என்ற பொருளில் வழங்கவில்லை, குறிக்கோள் பொருளில்தான் வழங்குகிறது. இந்தப் பொருள்களும் வடமொழிக்கு உரிய பொருள்கள் அல்ல. அவற்றின் பகுதி தமிழின் 'இலங்கு' (தோன்று) என்பதும் 'இலகு' (நிலவு) என்பதுமே. இவற்றின் அடியாக இலக்கு என்ற பெயர் குறிக்கோள், இடம் என்ற இரு பொருள்களும் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. இடம் என்ற பொருளில் அஃது இன்றும் இராமநாதபுர மாவட்டங்களில் வழங்குகிறது.

ஒரு சொல் தமிழிலும் இருந்து வடமொழியிலும் இருந்தால் அது வடமொழியாகத்தான் இருக்கவேண்டும் என்ற ஒரு மூடநம்பிக்கை இன்னும் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் வடமொழி தமிழைப்போலப் பழமையான இலக்கண இலக்கியம் உடைய மொழியென்று இன்று தமிழறிஞர்கூட நம்பிவருவதே. ஆனால் உண்மையில் வடமொழி, தேவார திருவாசக காலங்களில் தமிழிலக்கியத்தைப் பார்த்து உருவாக்கப்பட்ட ஒரு மொழி. அதன் சொற்கள் தமிழிலிருந்தும் பிற திராவிட நாட்டு வடநாட்டு மொழிகளிலிருந்தும் எடுத்துத் தொகுக்கப்பட்டவையேயாகும். உண்மையில் வடமொழி வடஇந்தியத் தாய்மொழிகளுக்குக்கூட மூலமொழியன்று. வேண்டுமானால் அதனை இந்தியாவிலுள்ள மொழிகளுக்கெல்லாம் பொதுமகள் என்று கூறலாம். ஆனால் சிறப்பு வகையில் அதனைத் தமிழின் மகள் என்று கூறுவது பொருந்தும். ஏனெனில் அதன் இலக்கணங்களும் இலக்கியங்களும் பெரும்பாலும் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் பார்த்துப் பகர்த்திக்கொள்ளப்பட்டவையே. அவற்றைப் பகர்த்தியவருள்ளும் தலைசிறந்த நூல்கள் எழுதியவருள்ளும் மிகப் பெரும்பாலோர் காஞ்சி நகரத்திலுள்ள தமிழரேயாவர். இவ்வுண்மை அறியுந்தோறும் இந்தியத் துணைக்கண்டத்திலே முதன்மைவாய்ந்த இந்திய நாகரிகமொழி, இந்திய இலக்கிய மொழி, பழமைப், புதுமைச் சிறப்பு இரண்டும்வாய்ந்த சிறப்புமொழி, தேசியமொழி தமிழே. வடமொழியன்று என்பது விளங்கும்.

# நெருஞ்சி

[செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமிபிள்ளை.]

உலகத்திற் காணப்பெறும் ஒவ்வொரு இயற்கைப் பொருள்களையும் கூர்ந்து நோக்கினால் அவ்வவையின் குணமும் வடிவும் நிறமும் நமக்குப் பெருவியப்பை ஊட்டுவதாகும்.

பறவை விலங்கு செடி கொடி முதலியன எவ்வளவு அழகினவாய் — சிறப்பினவாய் — வியக்கத்தக்கனவாய் எமக்குக் காட்சியளிக்கின்றன. செடி கொடிகளின் பூக்கள், ஒன்று காலையில் மலர்கின்றது; மற்றொன்று மாலையில் விரிகின்றது; வேறொன்று இரவில் அலர்கின்றது; ஒன்று பகலிற் கூம்புகின்றது; இன்னொன்று இரவில் சாம்புகின்றது; ஒன்று வெண்ணிறம்; மற்றொன்று செந்நிறம்; வேறொன்று பொன்னிறம்; இன்னொன்று நீனிறம்; பின்னொன்று பன்னிறம்; என்னே! இயற்கைக் காட்சி! என்னே! இயற்கையின் நுண்மை! என்னே! இயற்கையின் தன்மை! ஆ! ஆ! இத்தகைய வியத்தகு நிறங்கள்—குணங்கள்—நலங்கள்—அழகுகள் இவைகட்கு யாண்டிருந்து கிட்டின?

வண்ண வண்ணப் பறவைகள்! வண்ணவண்ண வண்ணாத்திப் பூச்சிகள்! வண்ணவண்ண விட்டில்கள்! வண்ணவண்ண எண்ணவொண்ணா நுண்மை அண்ணிய கண்ணைக் கவரும் சிற்றுயிர் ஈட்டங்கள்! இவைகளையெல்லாம்—இவைகளின் குணநலங்களையெல்லாம்—நாம் கூர்ந்து எண்ணுவதில்லை; கூர்ந்து பார்ப்பதுமில்லை; பன்னாட் பார்த்துப் பார்த்து அறிந்தவைகளை நாம் ஒரு பொருட்டாக நினைப்பதுமில்லை; இது மக்கள் இயற்கை. அவைகளை அறிவுத்திறங்கொண்டு எண்ணிப்பார்த்தால், அவைகளின் நுட்பங்கள் நமக்குத் தெற்றெனப் புலனாகும்.

இவ் இயற்கைப் பொருள்களைக் கண்டு தெளிந்தோரே நம் தமிழ்ப்பெருமக்கள். அவர்கள் இயற்கையிற்படிந்து, இயற்கையில் திளைத்து, இயற்கையில் ஆழ்ந்து, இயற்கை வாழ்வே வாழ்வாக வாழ்ந்துவந்தனர். அவர்கள் கண்டது இயற்கை! கேட்டது இயற்கை! உண்டது இயற்கை! உயிர்த்தது இயற்கை! உடுத்தது இயற்கை! யாவும் இயற்கையே. அன்னார் தேநீர் அருந்தினாரில்லை; காப்பி நீர் குடித்தாரில்லை; ஆவி நீர் (சோடா கலர்) உண்டாரில்லை; இயற்கை வாழ்வு வாழ்ந்து இயற்கை வழி ஒழுகினதால்தான் பன்னெடுநாள் உடலுரம்பெற்று உயர்வுற வாழ்ந்தனர். அவரின் கால்வழித் தோன்றினோரே சங்க

நூல் தந்த நல்லிசைப் புலமைவல்ல சான்றோராவர். அவர்கள் பாடியுள்ள நூல்களில் யாண்டும் இயற்கையைக் காணலாம். அவர்கள் ஒவ்வொரு செடி கொடிகளின் இயல்புகளையும் குண நலங்களையும் சிறிதும் பிழையாது நன்கு அறிந்திருந்தனர். அதனால் தாம் அறிந்த பொருள்களின் நுட்பங்களைப் படம் பிடித்ததுபோற் காட்டி விளக்கியருள்வாராயினர். அவர்கள் செய்த நூல்கள் படிக்கப்படிக்கத் தெவிட்டா இன்சுவையவாய், நவில் தொறும் நவில்தோறும் நயம்பல காட்டுவனவாய்த் திகழும். அந்நூல்களில் மேகக் குமுறல் கேட்கும்; கடலின் இரைச்சல் காணும்; சிங்கப் பேரொலி முழங்கும்; புலியின் சீற்றம் பொங்கும்; குயிலின் கூவு கேட்கும்; கிள்ளை மென்மொழி விள்ளும்; மயிலின் காட்சி தோன்றும்; காலைஞாயிறு கவினும்; மாலைப்பிறை வயங்கும்; வீரம் மிளிரும்; அன்பு அரும்பும்; இன்பு கூரும்; என்னே! அந்நூல்களின் பண்பாடு! எம்மால் உரைக்கும் திறத்தன ஆமோ! அந்நூல்களிற் படிந்தால் இன்பம்! இன்பம்! என்றும் நிலைத்த இன்பமேயன்றோ!

பாட்டை (ரோடு) ஓரங்களில்—கடற்கரைகளில்—புன்னை மரங்கள் வரிசை வரிசையாக இலைகள் பொதுளி மெல்லரும்பு முகிழ்த்துப் பூத்துக் காய்த்துக் குலுங்கிக் கண்ணுக்குப் பெருவிருந்தாக இருப்பன; அவைகளை நாம் ஒவ்வொரு நாளும் காண்கின்றோம். அப்புன்னையின் காட்சியில் பழங்காலப் புலவரொருவர் ஈடுபட்டார். புன்னையரும்புகளின் வெள்ளிய நிறம், அவர் கண்களைப் பறித்தது. இலைகளின் இடையிடையேயுள்ள அதன் முழுஇயல்புகளை உற்று நோக்கி அதற்கு உவமை காணிய எண்ணினார். வானிடையில் தோன்றும் விண்மீன்கள்போல் அவர் கருத்துக்குத் தோன்றிற்று. உடனே பாவாக மிளிர்ந்தது; தந்தார்; அவ் வடிப்பின்பகுதி,

> "மீன்கண் டன்ன மெல்லரும் பூழ்த்த
> முடவுமுதிர் புன்னை" (அகம் : ௧0)

என்பதாகும்.

மற்றொரு புலவர், மலைக் காட்சியைக் கண்டு மன மாண்புற்ற வாழ்க்கையர். அவர், அம்மலைகளில் உள்ள செம்முகக் குரங்குகள் மலையருவியில் நீராடி, மூங்கில்களில் ஏறி, அவைகளை வளைத்து வளைத்து ஊசலாடி, வேங்கை மரக்கிளைகளில் அம் மூங்கில்கள் தாக்க, மலையிலுள்ள சிறு சுனைகளில் அவ் வேங்கைப் பூக்கள் உதிர்ந்து நிரம்பும்படி ஆணும் பெண்ணுமாகக் கூடிக் களித்து, இன்புற்றிருந்தன; கண்டார். அதனையே பாவாகப் புனைந்து வைத்தார். அது:

" கருவிரல் மந்தி செம்முகப் பெருங்கிளை
பெருவரை அடுக்கத்து அருவி ஆடி
ஓங்குகழை ஊசல் தூங்கி வேங்கை
வெற்பணி நறுவீ நற்சுனை உறைப்பக்
கலையொடு திளைக்கும்" (நற்றிணை : ௩௩௪)

என்பதாகும்.

வேறொரு புலவர் பெருமகனார், மருதநிலக் காட்சியில் பன்னூட் பண்பட்ட நுண்ணறிவாளர். அவர் ஒரு தடாகத்தின் பக்கலிலுள்ள காஞ்சிமரக் கிளையில் பொன்வாயுள்ள நீலநிறம் படைத்த மீன்கொத்திப் பறவை, நீர்த்தடாகத்தை நோக்கிக் கொண்டிருந்து மீன்கள் வருவன கண்டு துடுமெனப் பாய்ந்து, கெண்டை மீன் ஒன்றை வாயிற் கௌவிச் சென்றதைக் கண்டார். அக்கண்ட காட்சியைத் தமிழ்ச்சுவை ததும்ப அரும்பாப் புனைந்தார். அது :

" குறுங்காற் காஞ்சிக் கொம்பர் ஏறி
நிலையருங் குட்டம் நோக்கி நெடிதிருந்து
புலவுக்கயல் எடுத்த பொன்வாய் மணிச்சிரல்."
(பத்துப், சிறுபாண் : ௧௭௯-௮௧.)

என்பதாகும்.

இவ்வாறே எண்ணிறந்த இயற்கைப்பொருள்களின் தன்மைகளைக் கண்டு கண்டு ஆரா அயரா இன்பினராயிருந்து இயற்கையாக வாழ்ந்தனர். அவ்வாறு கண்ட பொருள்களுள்—நல்லிசைப் புலமைவல்ல அப்புலவர் வாயிற் பொருந்திய பொருள்களுள், இக் கட்டுரைத் தலைப்பாகும் 'நெருஞ்சி'யும் ஒன்றாம்.

## நெருஞ்சி வகையும் தன்மையும்

இந் நெருஞ்சி ஆள்வழக்கற்ற அருநிலங்களிலே செழித்துப் படருந் தன்மையது. நம் தமிழ் மக்கள் தாம் பழமையானவர் என்பதைக் குறிப்பிடும்போது, '**நாங்கள் நெருஞ்சி தூர்த்துக் குடிபுகுந்தோம்,**' என்பர். எனவே பழங்காலமுதல் நம் நாட்டில் திகழ்ந்துவந்த அரும்பெருங் கொடியே இந் நெருஞ்சியாகும். அது : **யானைநெருஞ்சி, பெருநெருஞ்சி, சிறுநெருஞ்சி** என மூவகையாக மூவகைப் பண்புகளோடு தனித்தனியாக உருவம் வேறுபட்டு இருப்பதை நாட்டுப்புறங்களில் காணலாம். இவைகளுள், யானைநெருஞ்சி குற்றுச் செடியாக வளருந்தன்மையுடையது. ஏனைய நெருஞ்சிகளோ கொடியாகத் தரையோடொன்றிப் படர்தலையுடையன. இந் நெருஞ்சிகள் யாவும் மருந்தாகப் பயன்படுவனவுமாம். யானைநெருஞ்சி மிக்க சூட்டைத் தணிக்கும் தன்மையுடையது. வெட்டைச் சூடுடையார்க்கு நீராகார நீரில் இலையைக் கசக்கிப் பிழிந்துகொடுப்பதுண்டு. மற்ற நெருஞ்சி

கள் இரண்டும் இலைக்கறியாகச் சமைத்து உண்ணப்படுந்தன்மையன. பல கீரைகளைக் கிள்ளியெடுத்து, இதனையும் சேர்த்துச் சமைத்து உண்டால் மிக்க சுவையாக இருக்கும். இவ் இலைக் கறியை உண்பின் நலனாக உடலுரத்துடன் வாழலாம். இந்நெருஞ்சிக் கீரையைத் தொடர்ந்துண்டால் நீர்ச்சுருக்கு, தாக வெப்பு முதலியனநீங்கிக் குளிர்மைதரும். இந் நெருஞ்சிகட்கு, வேற்று மொழிப் பெயராக வேறு பெயர்கள் உள்ளன. அவை: திரிகண்டம், திரிகண்டகம், தும்பு, அசுவசட்டிரம், அவுதட்டம், சோகணிடம், கர்பரசி, சுவாதுகண்டம், கிட்டிரம், சோகண்டம், அதம் என்பனவாகும். இந் நெருஞ்சிக்குரிய குணநலங்களை,

> "மேகவெட்டை நீர்ச்சுருக்கு வீறுதிரி தோடம்புண்
> வேகசுர தாகவெப்பம் விட்டொழியும்—போகம்
> தரும்சீன் மதலைமொழித் தையலே நல்ல
> நெருஞ்சில் அதனை நினை." (குணபாடம், பக்: ௪௨௫)

என, மருத்துவநூலில் கூறப்பெற்றுள்ளது.

இவைகளுள், பெருநெருஞ்சி, சிறுநெருஞ்சி ஆகிய இரண்டும் மேட்டுப் பாங்கான நிலங்களில் தண்ணீரற்ற இடங்களில் நெருங்கிப் பற்றிப் படர்ந்து, பூக்கள் 'மஞ்சள் மசே'rena மலர்ந்து வரிசை வரிசையாக இருக்கும். அப் பூக்களின் அழகு பார்ப்போரின் கண்ணையும் மனத்தையும் கவர்ந்து இன்புறுத்தும் தகையன; ஆனால், மணமில்லாதன. இப்பூக்கள் பகலவன் செல்லும் திசைகளை நோக்கியே சென்றுகொண்டிருக்கும் தன்மையன. வெய்யோன் கிழக்கில் தோன்றி வரும்போது, தாமும் கிழக்கில் சாய்ந்திருக்கும்; உச்சிக்கு வந்தால் இப்பூக்களும் உச்சிக்கு நேர் நிமிர்ந்து நிற்கும்; மேற்கில் பொழுது சாயும் போது, இவைகளும் மேற்கேயே சாய்ந்திருக்கும். இவ் இயற்கைத் தன்மையை நம் புலவர்பெருமக்கள் நன்கு அறிந்திருந்தனர். அதைத் தாம் பாடிய பாக்களின் இடையிடையே கோத்துவைப்பாராயினர். அப்பூக்கள் ஆறிதழ்களை யுடையன. பின் பிஞ்சுவிட்டுக் காயாகிப் பழமாகப் பழுக்கும் பழங்களும் உடையன. அவை பழுத்தால் முட்கள் புறத்தில் முதிர்ந்திருக்கும். அவைகளை மிதித்தால் காலில் உறுத்தித் தைத்து வருத்துந்தன்மையுடையன. ஆனால் காலில் முறியாதவை. இத்தகையவாம் இவ் இருவகை நெருஞ்சிகளில் ஈண்டு எம்மால் இக்கட்டுரைப் பொருளாக எடுத்துக்கொள்ளப் பெறுவது, சிறுநெருஞ்சி ஒன்றே ஆகும். அதைப்பற்றியே நூல்களுள் ஆங்காங்கே இடையிடையே வரக் கூறப்பெற்றுள்ளன. அவை மிகுதியாகப் படர்ந்துகிடக்கும் இடங்கள், பூக்களின் தன்மை, முள்ளின் தன்மைகளே அந் நூல்களில் எடுத்துக் காட்டுவன ஆகும். எனவே, அவைகளுள்

ஒரு சில யாம் அறிந்தவற்றால் அந்நூல்களின் துணைகொண்டு காட்டுதும்.

சோழன் கரிகாற் பெருவளத்தான்மீது கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய 'பட்டினப்பாலை' என்னும் நூலில் அம் மன்னன் வெற்றிப் பெருமிதம் குறித்துக் கூறுங்கால், அவன் வேற்றரசன் நாட்டைப் படையெடுத்துச் சிதைத்தழித்து வழு நிலமாக்கினனென்றும், அதில் நெருஞ்சியும், அறுகும் பம்பிப் படர்ந்ததென்றும் கூறுகின்றார், அது:

"சிறுபூ நெருஞ்சியோடு அறுகை பம்பி
அழல்வாய் ஓரி அஞ்சுவரக் கதிர்ப்பவும்" (பட்டினப்பாலை : உ௫௬-எ)

எனவும்,

சேரமான் இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக்கௌதமனார் பாடிய பதிற்றுப்பத்தில், அவனுடன் பகைகொண்டு போருடற்றி அழிந்து கிடக்கின்ற நாட்டைக் குறித்துக் கூறுங்கால்:

"பீரிவர் வேலிப் பாழ்மனை நெருஞ்சிக்
காடுறு கடுநெறி யாக மன்னிய
முருகுடன்று கறுத்த கலியழி மூதூர்
உரும்பில் கூற்றத் தன்னநின்
திருந்துதொழில் வயவர் சீறிய நாடே" (பதிற்றுப்பத்து : உ௬)

எனவும்,

பகைவர் நாடழிந்து பாழ்நிலமாகி அந்நிலங்களில் பீர்க்குப்படர்ந்து நெருஞ்சிகள் மண்டி ஆளரவம் அற்ற கடுங் காடாக இருப்பதில், இந் நெருஞ்சிகள் படர்ந்திருப்பதையே குறிப்பிடுகின்றார்.

மணிமேகலைப் பெருங்காப்பியத்தில் மக்கட்குத் துன்பந் தரும் தீவினைகள் சூழ்ந்து பற்றிக்கொண்டிருப்பதற்கு அறுகம் புல்லையும் நெருஞ்சியையுமே காட்டுகின்றார். அது:

"அறுகையும் நெருஞ்சியும் அடர்ந்து கண்ணடைத்தாங்கு
செயிர்வழங்கு தீக்கதி திறந்து." (மணிமேகலை, கஉ : ௬O-௬க.)

என வருதல்கொண்டு அறியலாம்.

"பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ." (புறம் : க௫௫)

எனப் புறநானூற்றிலும் நெருஞ்சி பாழூர்களிலேயே படர்ந்து கிடக்குமெனக் கூறப்பட்டிருப்பது காண்க.

(தொடரும்)

# இது தகுமோ?

[புதுவை. முதுகண்ணன்.]

தமிழரசர் தலைமையிகழ்ந்து தனிச்செருக்கில் மிதந்திருந்த
இமயஞ்சார் வடவரசர் இரும்படையை ஒருங்கொடுக்கித்
தமிழ்மறவர் திறங்காட்டித் தமிழ்நாட்டுத் தனிச்சிறப்பார்
தமிழ்மகளாங் கண்ணகிக்குத் தகுசிலையை நிலைநாட்ட
இமயத்துக் கருங்கல்லை [1]'இகழ்ந்தவர்'தம் தலைக்கொணர்ந்து
குமரிமுதல் இமயமெலாம் குலவுதமிழ் வைத்தாண்ட
தமிழர்தம் வழிவந்த தகுதிறஞ்சார் தமிழாகேள் !
இமயத்தில் புலிசிலைமீன் இருங்கொடியை உயர்த்தினைநீ
அமைகின்றாய் அடிமையிலே அருந்தமிழா இதுதகுமோ ?
இன்றுன்னைப் பிறநிலத்தார் இகழ்ந்துரைத்தே உனதுமொழி
பொன்றுவணம் பெருஞ்சூழ்ச்சி புரிகின்றார் இதுதகுமோ ?
[2]"கன்றியசீர்" தொலைவுறவே கடுஞ்செயலை மறைமுகமாய்
நன்றுபிறர் விளைக்கவும்நீ நகுநிலையில் இருப்பதுவோ ?
பெருஞ்சோறு பிறர்க்களித்தாய் பிடுங்குபசி யுழல்கின்றாய்
இருநிலத்தில் இதுவேனோ? எழிற்றமிழா இதுதகுமோ?
"நடுநின்ற நன்மனத்தால் நயவாது பிறர்பொருளை"
வடுநேரா வழிநின்று வயங்கினாய் முன்னன்றோ ?
இன்றோநீ பிறர்பொருளை இழிசெயலாங் கரவுளத்தால்
'நன்றல்லா வணிகத்தால்' நயக்கின்றாய் இதுதகுமோ ?
மற்றுநீ,
அல்லவை செய்தொழுகும் ஆட்சி யொழித்தின்றே
பல்லவையோர் போற்றும் பழமறையாம்—வள்ளுவர்தம்
முப்பால் முழுநெறியே முன்னித் தமிழரசை
இப்போதே காண எழு.

குறிப்பு :- [1]'இகழ்ந்தவர்' கனகவிசயர்—[2]'கன்றியசீர்' பண்டுதொட்டுவந்த புகழ் - (இதில் கன்றிய என்பதற்குத் 'ததும்பிய' என்பர் அடியார்க்கு நல்லார் ; நாட்டாரவர்கள் 'அடிப்பட்ட' என்று பொருளுரைப்பர்.) 'நன்றல்லா வணிகம்': 'ப்ளாக் மார்க்கட்' கள்ள வணிகம். "நடுநின்ற நன்மனத்தால் நயவாது பிறர்பொருளை" இதனை "நடுவுநின்ற நன்னெஞ்சினோர் வடுவஞ்சி வாய் மொழிந்து தமவும் பிறவும் ஒப்பநாடி" என்பதனோடு ஒப்பு நோக்குக. "பெருஞ்சோறு பிறர்க்களித்தாய்": "பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"—புறம் 2.

# மனோன்மணீயம்

[தமிழாசிரியர் A. மகாலிங்கம்.]

அமிழ்தினு மினிய தமிழ்மொழியதனுள் ஒன்பான் சுவை புணர்த்து அன்பால் வளர்த்து அருள்நச்சும் பெருமையினை யுடைய முச்சங்கத்து இலக்கிய நூற்களைக்கற்று நாம் பேருவகை எய்துகின்றோம். அத்தகைய நுண்ணிய நூற்களைக்கற்ற மனம் கண்டு, கேட்டு, உணர்ந்து இன்பம் நுகரவல்ல, பிற்கால நூற்களுள் மாண்புறு மனோன்மணீயமும் ஒன்று என்னலாம். அதன் பெரும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை யென்பார், வஞ்சி நாடதனில் நஞ்சைநாடெனச் செந்தமிழ் வழங்கும் தேயமொன்றதனின் அருகே பிறந்து கொடுமலையாளக் குடியிருப்புடையராயினும், தமிழே தாயெனும் தன்மையின் மேய் பேராசை மீக்கொள, தமிழின் மேன்மைக்கு—உழைத்தலே தகுதியென்று எண்ணி இழைத்த இந்த நாடகம் இதுகாறும் புலவரும் புரவலரும் போற்றும்வண்ணம் பலவகைச் சிறப்பு நலங்களைத் தன்னகத்தேகொண்டு இலங்குதல் காணலாகும்.

மனோன்மணீயத்தின் சிறப்புக்கள் பல. அதன் கவிநயமும், கற்பனைநயமும், உவமைநயமும், ஓவியநயமும், காதல்நயமும், காமுகர் நிலைமையும் "நெஞ்சிடில் மிஞ்சுவர் மிஞ்சிடிற் கெஞ்சுவர்" என்ற குறுகிய கொள்கையுடைய குடிலன் அழியுந்தன்மையும்; அன்பே உயிரா, அழகே யாக்கையா, மன்பே ருலகுசெய் மாதவமதனால், மலைமகள் கருணையும், கலைமகள் உணர்வும், கமலையின் எழிலும் அமையவோர் உருவாய், பாண்டியன் தொல்குலமாகிய பாற்கடல், கீண்டெழுமதியென ஈண்டவதரித்த மனோன்மணியின் மாண்புறு நிலையும்; பளிங்கு என்னக் களங்கமில் நெஞ்சுடைய ஜீவகமன்னன் சீர்பெறுநிலையும்; வாரிசம்போல மலர்ந்த வதனமும், கருணை அலையெறிந்து ஒழுகுங்கண்ணும், பரிவுடன் முகிழ்க்கும் முறுவலும், பால்போல் நரைதரு தலையும், புரையரு உரையும், சாந்தமும் தயையும் தங்கிய உடலும் பொருந்திய சுந்தரமுனிவரின் சிந்துர அடியின் சிறப்பும்; காதலே உருவாயமைந்த சொல்லின் செல்வி வாணியின் நயமிக்க உரையும், நூலின்கண்ணே ஆண்டாண்டு அறிந்து மகிழ்கின்றோம்.

மனோன்மணீயம் செய்யுள் யாப்பில் அமைந்ததொன்றாயினும், அதனைப் படிக்கத் துணிகின்றவர் மனம் தடையின்றி இறுதிவரை இழுத்துச்செல்லப்படுகின்றது.

நெல்லைப்பதி (திருநெல்வேலி)யில் கதை தொடங்குகின்றது. தெருவெல்லாம்,

“சுந்தர முனிவா! வந்தனம், வந்தனம்
எனுமொலி யேசிறந் தெழுந்தது கேண்மின்
முனிவர் என்றிடிற் கனிவுறும் கல்லும்
எத்துணை பக்தி எத்துணைக் கூட்டம்
எவ்விடற் கிடமிலை யான்போய்க் கண்டேன்”

(முதல் அங்கம் முதற் களம் 10-15)

என்ன சேவகர் வாயிலாக அடிகளின் வரவை ஆவலோடு எதிர் பார்க்கின்றோம்.

அறிவுமேம்பட்ட அரசன் ஐம்புலன்களை அடக்கிய அடிகளை எங்ஙனம் வரவேற்கின்றான்?

“வருக! வருக! குருகிரு பாங்கே
திருவடி தீண்டப் பெற்றஇச் சிறுகுடில்
அருமலைச் சிகரமோ ஆலநன் னீழலோ
குருகுல விசயன் கொடித்தேர்ப் பீடமோ
யாதென ஓதுவன் தீதற ஆதனத்து
இருந்தருள் இறைவ..................

(முதல் அங்கம், முதற் களம்: 20-25)

என்று செவ்விய மொழிகள் பகர்கின்றான்.

மேற்கூறிய சில அடிகளினின்று மனோன்மணீயத்தின் நடைப்போக்கை ஒருவாறு அறிகின்றோம்.

மனோன்மணீயத்துட் காணப்படும் அரிய சிறப்புக்களுள் மனோன்மணி, வாணியைத் தலையிலிருந்து கால்வரை அடை மொழிகளால் அழைக்கும் முறையொன்றாம்.”

மறையேல்! மறையேல்! பிறைபழி நுதலாய்!
காதள வோடிய கண்ணாய்!
இனிது! இனிது வாணி எட்பூ
ஏசிய நாசி யாய்இ யம்புக.
முல்லையின் முகையும் முருக்கி னிதழும்
காட்டும் கைரவ வாயாய்!
வள்ளையின் அழகெலாம் கொள்ளைகொள் அணங்கே!
வலம்புரி புறத்தெழு கலந்திகழ் மதியென
வதியும் வதன மங்காய் வாணீ!
வேய்கொள் தோளீ! விளம்பாய் எனக்கே
கண்டோ எனுமொழிக் காரிகை யணங்கே!
காந்தள் காட்டும் கையாய்!
மின்புரை யிடையாய்!
மாந்தளிர் வாட்டும் மேனி! வாணீ
வடதளவு தரவாணீ! மங்காய்!
ஏயு மெழிற்கால் வாணீ
அழுங்கலை! அழுங்கலை! அனிச்சமும் நெருஞ்சிலா
அஞ்சிட அடியாய்..................

இந்நாடகத்து வருகின்ற உவமைகள் பல கற்றோரும் மற்றோரும் களிந்தேத்தும் தன்மையன. ஆண்டு கொள்ளப் படும் பழமொழிகளும் போற்றுதற்குரியன. "காதலிற் கவிழ்வை போலும்" என்ற வாணிக்கு "நெருப்பையும் கறையான் அரிக்குமோ" என்கிறாள் தலைவி. எருதீன்றெனுமுன் என்ன கன்றென்று திரிபவ ரொப்ப; பூவையை வளர்த்துப் பூனைக் கீயவோ? பேயனுக்களிக்கவோ பெற்ற நம் பெண்ணை; எரி மேல் இட்ட இழுது; குழவிப்பருவம் நழுவுங்காலை களிமிகு கன்னியர் உளமும் வாக்கும் புளியம்பழமும் தோடும் போலாம்; போர் வந்திடின் இவண்நேர் வந்திடுமெலாம்; அப்பம் தின்னவோ அலால்குழி எண்ணவோ? ஆடையின் சிறப் பெலாம் அணிவோர் சிறப்பே; பாடையின் சிறப்பெலாம் பயில் வோர் சிறப்பே; அருகுளது எட்டியேயாயினும் முல்லைப் படர் கொடி படரும் என்பன சில நயமிக்க பழமொழிகள்.

சொல்நயமும் பொருள்நயமும் அமைந்த பாடல்கள் பல. எடுத்துக்காட்டு.

> "மாற்றலர்தம் மங்கையர்க்கு மங்கலநாண் அங்கவிழ
> ஏற்றியநாண் விற்பூட்டும் ஏந்தலே—சோற்றதற்காய்
> தன்மகவை விற்றஅரிச் சந்திரனும் உன்னவையில்
> என்மகிமை யுள்ளான் இனி,"
>
> (முதல் அங்கம், மூன்றாம் களம்: அடி-96)

என்ற நாராயணன் மொழியில் சோற்று அதற்காய் என்பது சோறு, சொல் என்னும் பகுதிகளைக்கொண்டு பொருள் சிறத் தல் அறிவுடை பலநூல் அமைவுறக் கற்றோர் அடையும் இன்ப மாகும்.

ஒருநாள் நறவுமிழ் நளினம் பொலிவிழந்திருப்ப, நம் மனை புகுந்த செல்வி மாலையில் லீலைச் சோலையுலாவி அமுதம் ஊற் றிருக்கும் குமுதவாய் விண்டு நயவுரை பலவும் குயிலின் மிழற்றி, மலையமாருதம் வந்து வந்துந்த நிலவொளி நீந்திய நெடுமுற்றத் தூப் பந்து வந்தாடி மந்திரம் அடைந்து துணைபுணர் அன்னத் தூவி யணைமிசை கண்படும் எல்லை கனவோ நினைவோ,

> "நண்ப! என்னுயிர் நாத என்றேங்கிப்
> புண்படும் அவள்போல் புலம்புறல் கேட்டு"

தோழியர் வருந்தியிருக்க "காகா இவளைக் காஎனக் கரைந்து, சேவலும் திகைத்துத் திசைதிசை கூவின" என்றவிடத்து காகம் வருந்துகின்ற மனோன்மணியைக் காக்கவேண்டவும், என்ன செய்வது என்றறியாத சேவல் திசைதிசை நாடுதலும் எண்ணி இன்புறற்குரியன.

சுந்தரமுனிவர் மனோன்மணியின் உடல்நோய் அறிய அழைக்கப்பட்டு வருகின்றார். மனோன்மணியின் உடல்நலத்தை உண்மையிலுணர்ந்தவராதலின் அரசனை நோக்கி,

"குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னியர் உளமும் வாக்கும்
புளியம் பழமும் தோடும் போலாம்
காதல் வெள்ளங் கதித்துப் பாந்து
மாத ருள்ளம் வாக்கெனு நீண்ட
இருகரை புரண்டு பெருமூச் செறியில்
எண்ண மெங்ஙனம் நண்ணு நாவினை
தாதா அன்பு போதாதாகும்
காலம் கன்னியர்க் குளதெனும் பெற்றி
சாலவும் மறந்தனை போலும்; தழைத்துப்
படர்கொடி பருவம் அணையில், நட்ட
இடமது துறந்துநல் லின்ப மெய்த
அருகுள தருவை அவாவுடன் அடையும்
முருகவிழ் முகையும் சுவைதரு கனியும்
அகமகிழ்ந்து அளித்து மிகவளர்ந் தோங்கும்
இல்லையெனில் நலமிழந் தொல்கும்"

என்றமை கேட்டான் ஜீவகன்.

புளிய மரத்தின் பழம் காயாக இருக்கின்ற காலையிலே அதனுடைய தோடும் அதனுள்ளிருக்கும் பொருளும் ஒன்றோடொன்று சேர்ந்து இரண்டும் ஒன்றாக இருக்கும். அதுபோலவே பெண்கள் குழவிகளாக இருக்கும்பொழுது அவர்களுடைய சொல்லும் உள்ளமும் ஒன்றாய்த் திகழும். காய் பழமாக மாறுங்கால் இதுகாறும் பிணிப்புண்டு ஒன்றாய் விளங்கிய தோடும் காயும் தோல் வேறு பழம் வேறு ஆக ஆகிவிடுகின்றன. அத்தன்மையையேபோல் பெண்கள் பேதை, பெதும்பைப் பருவங்களைக் கடந்து மங்கையாகவோ மடந்தையாகவோ மாறும்வேளை உளமொன்று நினைக்கச் சொல்லொன்று கூறச் செயலொன்றுகாட்ட நிற்பார்கள். அவர்கள் உள்நிறையுடைய பெண்களின் மனத்தைக்காட்ட ஆசிரியர் கையாண்ட உவமை என்னே! காணுந்தோறும் வியக்கற்பாலது.

முனிவனது கருத்தை முடிக்கக் கருதிய ஜீவகன் தருமநாடென்னும் ஒரு நாமங்கொள் திருவாழ் கோடாம் சேரநாட்டுப் புருடோத்தமனெனும் பொருவிலாப் புருடனை நாட விழைகின்றான்.

இவற்றை எல்லாம் விடச் சிறந்தவோர் இடம் கற்றோரையும் மற்றோரையும் வேற்றுமைப் படுத்துவது யாக்கையாலல்ல, நாக்கினாலேயேயாம் என்பதை வாணியின் சொல்லின் திறத்தால்

அறிகின்றோம். வாணியின் நினைவு கனிந்த உள்ளம் அறியாத களங்கமில் மன்னன், வாணியை நோக்கி,

"....................................மின்னேய்
மருங்குல் வாணி வாராய் இப்புறம்
..................................................
நல்மே சிறந்த குலமே பிறந்த
பலதேவனு மொரு பாக்கிய சிலாக்கியன்
தன்னை நீ விடுத்துப் பின்னையோர் பித்தனை
நச்சிய தென்னைச் சீச்சீ
நகையே யாகும் நீ செயும் வகையே."

என்றான்.

அதற்கு வாணி சிறிதும் தாழ்க்காது பதிலுரைக்கின்றாள்.

" அகலிடந் தனிபுரந் தாளும் வேந்தே
..................................................
கற்பனைக் கெதிராய் அற்பமும் மொழியேன்
ஆயினும் ஐயமொன் றுண்டு நேயமும்
ஆக்கப் படும்பொருள் ஆமோ ? நோக்கில்
துன்பமே நிறையும் மன்பே ருலகாம்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாருவாய்த் தழைத்தும் ஓயாத் தொழிலில்
நேரும் தாகம் நீக்குவான் நிமல
ஊற்றா யிருந்தவ ருள்ளம் ஆற்றியும்
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாயவர் நெறிமுறை காத்தும்
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாயவர் ஊக்க முயர்த்தியும்
இவ்விதம் யாரையும் செவ்விதிற் படுத்தி
இகத்துள சுகத்திற் களவுகோ லாகி
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்
இல்லறம் என்பதன் நல்லுயி ரேயாய்
நின்ற காதலின் நிலைமை நினையில்
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பாய் உருகி
ஒன்றாந் தன்மை யன்றி ஒருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ ?"

குடிலன் கீழ்மை யென்னும் பெயருக்கிணங்க தன் உளம், மொழி, செயல் என்ற மூன்று அகக் கருவிகளாலும் பொய்ம்மை கண்டான் என்பது அவனுடைய நயவுரைகளாலும் செய்கைத் திறத்தினாலும் இனிது விளங்கும். பிறர்க்கின்னா முற்பகல் செய்தமையின், தன் பெறற்கரும் பதவியை யிழந்து பெருந்துயர் எய்தினான். ஜீவகனுடைய நண்பரும் குருவுமாகிய சுந்தரமுனிவர் தீயர் என்னத் தன் சொல்வன்மையால் கூறுகின்றமை எண்ணுதற்குரியது.

" துறந்தார் முற்றும் துறந்தா ரல்லர்
மறந்தார் சிற்சில................."
கௌசிகன் இரக்கவோர் மௌலிவேந்தன்
பட்டபா டுலகில் யாவரே பட்டுளார்
..........................................
முனிவரேயாயினும் மனிதரே மீண்டும்
இச்சை யற்றவர் இச்சகத்து யாவர்
மேலும்
"...................................ஆ ! ஆ !
மாறன் மாண்டான் மன்றலும் போனது
சேரன் இறுமாப் புடையதோர் வீரன்
ஆமெனப் பலரும் அறைவர் அதனால்
நாம் அவன் பால்விடுந் தூதுவர் நலம்போல்
மெள்ள அவன்றன் செருக்கினைக் கிள்ளிற்
பழுடை கொடு வருவன் திண்ணம் பாண்டியன்
அடைவது அப் போதியாம் அறிவம்
யாரிற வார்கள் ? யாரறி வார்கள் ?
முடிதன் அடிவிழில் யாரெடுத் தணியார்.

குடிலன்மீது எவ்வளவு வெறுப்படைகின்றோமோ அதனை விட வாணியின் நல்லெண்ணங்களை மெய்ச்சுகின்றோம்.

நாடக இறுதியிலே மனோன்மணிக்குப் பலதேவன் கணவனுகுந் தருணம் நெருங்கினமை கண்ட யாவரும் துன்புற்றனர். விதியின் கொடுமையை நோக்கி ஏங்கினாள் கற்பிற்கரசி. ஆனால் வாணியின் எண்ணங்களோ இறைவன்பாற் சென்றன. தன் தலைவி உய்யும் வண்ணம் வேண்டுகிறாள். யானையை நீர்தனில் இழுத்த முதலையினை வலத்தேகொண்ட ஆழியினால் மாயோன் மடித்த வரலாற்றினையும் தீண்டாத கற்புடைய செழுந்திருவாகிய திரௌபதியை வேந்தவையில் துச்சாதனன் துகிலுரியச் செயலொன்றின்றி "நீண்டானே, கரியானே, நிமலா," என அரற்றி அவள் முறையிடுநாள் அவள் தம் இன்னலைக் களைந்து கண்ணன் காத்த கதையினையும், கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவனுகிய எமன் வந்து கயிறுகொண்டு பிணித்தகாலை மார்க்கண்டன் எவ்வுயிர்க்குந் தந்தை தாயாகிய இறைவனின் இலிங்கத்தினைத் தழுவிப் பிழைத்த செய்தியினையும் உள்ளடக்கி இறைவனை நோக்கி "உன் திருப்பெயரோ, உறைவிடமோ, திருவுருவோ யாதுமொன்றறியேனுயினும் அன்று அவருக்கருளியவாறு எனக்கும் அருள் சுரந்து நேர் நிற்றல் நினதருளே," என்று செந்தமிழ்ச் சொற்களால் பரவுதல் படிக்குந்தோறும் மகிழ்ச்சியைத் தரவல்லது.

இன்னோரன்ன பலநலங்களும் ஒருங்கேயமையப்பெற்ற மனோன்மணீயத்தைக் கற்று இன்புறுவது போற்றற்குரியது.

# சங்க இலக்கியங்களில் இல்லையா?

[சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, B.O.L., மயிலம்.]

## 1. வாழ்க்கைத்துணைத் தேர்தலில் பெற்றோர் பொறுப்பு

உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் புகழ்தேடவேண்டும்; புகழ்தேட அறநெறி நிற்றல்வேண்டும்; அறநெறியில் நிற்க வாழ்க்கை வேண்டும்; வாழ்க்கைக்குத் துணைவர் வேண்டும்; துணைவர் இன்பதுன்பங்களில் பிரியாது எப்பொழுதும் உடனுறைந்து ஆவன செய்பவராயிருத்தல் வேண்டும்; ஆடவர்க்கு, அத்துணைவர் மனைத்தக்க மாண்புடையவரும் தம் காதலராதுவளத்துக்குத்தக வாழ்க்கையை நடத்துபவருமாகிய மகளிராதல் வேண்டும்; மகளிர்க்கு, அத்துணைவர் மனைத்தக்க மாண்புடையவராகித் தந்துணைவரைப் போற்றிவாழும் இயல்புடைய ஆடவராதல் வேண்டும்; இத்தகைய துணைவரைத் தேர்ந்தெடுப்பது 'யாரது கடமை?', 'எவ்வாறு?' என ஆய்வாம்.

மணம் எண்வகைப்படும். அவை, 'பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம்' என்பனவாம் இவற்றுள் பிரமம் என்பது, பிரமசரியம் காத்தானுக்குப் பெற்றோர் தம் மகளை மணம்செய்து கொடுத்தலாம்; பிரசாபத்தியம் என்பது, மணமகனின் பெற்றோர் கேட்க, பெற்றோர் இயைந்து தம்மகளை மணம்செய்து கொடுத்தலாம். ஆரிடம் என்பது, மணமகனிடமிருந்து பரியம் (சுல்கம்) வாங்கிக் கொண்டு பெற்றோர் தம் மகளை மணம் செய்துகொடுத்தலாம். தெய்வம் என்பது, வேள்வி ஆசிரியனுக்கு அவ்வேள்வித் தீயின் முன்னர் அவ்வேள்வியைச் செய்வோன் தன் மகளை மணம் செய்து கொடுத்தலாம். காந்தர்வம் என்பது, கொடுப்பாரும் அடுப்பாருமின்றி மணப்பருவத்திற்குரிய ஓர் ஆடவனும் மங்கையும் ஊழ்கூட்டுவிக்கத் தாமே தமியராய்த் தனியிடத்தே சந்தித்துக் கூடி மணம் செய்துகொள்ளுதலாம். அசுரம் என்பது, வில்லேற்றுதல், கொல்லேறு தழுவல், திரிபன்றி யெய்தல் முதலிய அருஞ்செயல்களைச் செய்தவற்குப்பெற்றோர் தம் பெண்ணை மணம் செய்துகொடுத்தலாம். இராக்கதம் என்பது, ஆடவர்கள் தாம் விரும்பிய மகளிரை, அம்மகளிர்க்கு—விருப்பமின்றெனினும், வலிந்துபற்றிக்கொள்ளுதலாம். பைசாசம் என்பது, கள்ளுண்டல், உறங்கல் முதலிய செய்கைகளால் தம் நிலைமாறியுள்ள மகளிரைப் போகம் துய்த்தலாம். இவ்வெட்டினுள் 'காந்தர்வ மணமே சிறந்தது; பண்டைத் தமிழர் தம் மணமுறை'

என்பர் அறிஞர். இக்கருத்தினையே நந்தமிழிலக்கண நூல்கள் கூறுவது கொண்டு 'பண்டைய நாளில் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய காதலரைத் தாமே தேர்ந்துகொண்டனர்; ஒருவருக்குரிய காதலரைப் பிறர் தேர்ந்தெடுக்கும் வழக்கம் இந்நாட்டிலிருந்ததில்லை,' என்று சிலர் வாய்ப்பறை யறைகின்றனர். இக்கொள்கை உண்மையா? வலியுடைத்தா என ஆய்வாம். ஏனெனில் இதன் பயன் 'வாழ்க்கைத் துணையைத்தேர்ந்தெடுப்பது யாரதுகடமை?' என்னும் வினாவிற்கு விடையாம்.

ஒரு நம்பியும் நங்கையும் தனித்தவராக—எதிர்ப்பட்டபோது விதிப்பயனால் ஒருவரையொருவர் கண்டமாத்திரத்தே இருவர்க்கும் உள்ளத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் ஒருங்கேயெழும். அவ்விருவரும் விரைவில் காமநுகர்ச்சியி லீடுபடுவர். இஃது காந்தருவத்துள்ளோர் வகையாம். இந்நிலை எல்லோர்க்கும் எய்துவதன்று. இவ்வாறு எதிர்ப்பட்டபோது நிகழாவிடின் அம்மங்கையோடு இன்பம் துய்க்கவேண்டும் என்னும் எண்ணமுடைய அவ்வாடவன் அவள்பால் தன் எண்ணம் விளங்குமாறு குறிப்பாகச் சில கூறுவான்; அவளது நன்னயங் கூறுவன்; இந்நிலையில் அவளுக்கு இயல்பாக மகிழ்ச்சி தோன்றும், ஆயினும் மகிழ்ச்சியைப் புலப்படுத்தும் நகைக் குறிப்பு மிக்குத் தோன்றாது. அவளது மகிழ்ச்சியைக் குறிப்பால் உணர்ந்த அவ்வாண்மகன் தன் மெலிவினை மீண்டும் குறிப்பாக விளக்குவான்; அவளது மெய்தொட்டுப் பயிலுவான; பொய் பாராட்டுவான்; தன்னிலையை வெளிப்படையாகக் கூறுவான்; அவளருகிற் சென்று தழுவவேண்டுவான்; தழுவுவான். அதனாலுண்டாகும் இன்பத்தை அவள் இதற்குமுன் உற்றறியாதவள் ஆதலின் அறிவிழந்து நிற்பாள். 'செய்வது இன்ன' தென அறியாது 'ஊழ்வழியுறுக' எனத் துணிவாள்; குறிப்பாகவோ வெளிப்படையாகவோ தன் வேட்கையை யுணர்த்தாது தன் கண்ணைக் கையால் மூடிக்கொள்வாள். பின்னர் இருவரும் கூடி இன்புறுவர். இஃதும் காந்தருவத்துள் ஓர் வகையாம்.

ஒரு கன்னியைத் தனியிடத்தே எதிர்ப்பட்ட ஓர் ஆடவன் தனது வேட்கையை யுணராது நிற்பாளைக் குறையிரக்க விரும்பான்; 'தான் இன்பம் பெறவேண்டும் என்பதற்காகப் பிறரைத் துன்புறுத்துவது அறமாதமோ?' எனக் கருதான்; 'வேட்டார்க்கு இனிதாயினல்லாது நீர்க்கினிதென்று உண்பாரோ நீருண்பவர்' எனக் கருதுவான்; அவளை வலிந்து பற்றுவான். அவன் கையில் அகப்பட்ட அம்மங்கை, 'கூறுஞ் சொற்கேளாது நலிகின்றான். இது வினைப்பயன் போலும். இனி இவனொடு

மாறுண்டோ?' எனக் கருதிக் கூடுவாள் (கலி 62) இஃதும் அதனுள் ஒரு வகையாம்.

ஓர் அழகிய நங்கையைத் தனியிடத்தே கண்டு காதல் கொள்ளும் ஓர் ஆடவன் தன் கருத்தை வாய்விட்டுரைக்கான். எனினும், அவளுக்குக் குறிப்பால் உணர்த்திச் செல்கிறான். அக் குறிப்பினை உணர்ந்த தலைவியும் ஆற்றாமை கொள்ளுகிறாள். இருவரும் ஒருவரையொருவர் கண்டின்புறுகிறார்களே யொழிய, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று இன்புறவில்லை. இவ்வாறு பல நாட்கள் கழிவது கண்ட தலைவி, யாதேனும் ஓர் காரணத்தைக் கற்பித்துக்கொண்டு, தானே தலைவனது மெய்தொட்டுப் பயிலமுயன்று, காமவின்பத்தை நுகர்வாள். (கலி - 37) இதுவும் அதனுள் ஒருவகையாம்.

1. இவ்வாறு பிறர் அறியாமல் தாமே அன்பொடு கலந்த காதலர் யாவர்க்கும் இயற்கைப் புணர்ச்சி முட்டின்றிக் கூடுதல் அரிதாம். முட்டுண்டானபோது—ஆடவன் வேட்கை தணியான்; முன்னாள் கண்டாற்போலப் பின்னும் காணலாகுமோ? எனக்கருதி அவ்விடத்தே செல்வான். அந்நங்கையும் அவனைப்போல் தனக்கு வேட்கை மிகுதலாலே அங்கே வருவாள். ஆண்டு இருவர்க்கும் புணர்ச்சி நிகழும். அந்நிலையிலேயும் ஆயத்தாராலாவது பிறராலாவது கூட்டுறவிற்கு இடையூறுண்டாதலியல்பே. அப்பொழுது அவ்விடையூற்றினை தன் பாங்கனுக் குணர்த்துவான் அவ்வாடவன். அப்பாங்கன் அந்நங்கை யிருக்குமிடம் அறிந்துகூற, அங்கே செல்வான். இருவர்க்கும் புணர்ச்சி நிகழும். அவ்விடத்தும் இடையூறுண்டானால், அந்நங்கையினது தோழிவாயிலாக அவளைப்பெற முயல்வான்.

அவ்வாறு முயல்கையில் அவ்வாடவனது குறை யுணர்ந்து, அக்குறையைப் போக்கக் கருதிய தோழி, அந்நங்கையிடம் அவனது கருத்தினைக் கூறி இணங்கும்படி செய்வாள். அவ்வாறு தோழி குறை நயப்பிக்கையில் பின்வருமாறு அவளிடம் கூறுவாள். அஃதாவது :—

"அம்மலைக் கிழவோன் நந்நயந் தென்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்,
நீயுங்கண்டு நுமரொடு மெண்ணி
அறிவறிந் தளவல் வேண்டும், மறுத்தற்கு
அரிய வாழி தோழி! பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே. (நற்: 32)

என்பதாம். ஈண்டு, தலைவிதானே நன்கு ஆய்தல் வேண்டுமென்றும், தமரொடும் சூழ்ந்து தெளிதல் வேண்டுமென்றும், தோழி கூறுகின்றாள். ஆய்ந்து தெளிந்த பின்னரே தன்னை நாடிய ஆடவனுக்குத் தன் கருத்தையறிவிக்க வேண்டுமென்றும் முதலில் காம நுகர்ச்சியொன்றைமாத்திரம் கருதிக் கூடிப் பின்னர் அவ்வாடவனுடைய இயல்புகளை ஆராயத் தொடங்குவது கூடாது என்றும் தோழி கூறுகின்றாள். தன்னை விரும்புபவனும் தன்னால் விரும்பப்படுபவனும் ஆகிய ஆடவன் தன்னேடொத்த தன்மையுடையவனோ? எனப் பெற்றோரொடு ஆய்ந்தறிந்துதான் அவனைத் தன் காதலனாக ஒருத்தி அடையவேண்டுமென்பதும், ஏற்றவனல்லன் எனத் தமர் கருதின் அவனைக் காதலனாகக் கொள்ளலாகாது என்பதும், அவர்தம் சொல்லைக் கேளாது தான் விரும்பியவனையே மணப்பின் பின்னர் ஒருகால் வாழ்க்கையில் வெறுப்புற்றுப் பிரிய (Divorce) நேரினும் நேரும் என்பதும், அவ்வாறு பிரியாது உடனுறை வாழ்வே விரும்பப்படுவது என்பதும் இதனால் நன்கு விளங்குகின்றனவன்றோ? எனவே, மகளுக்கேற்ற மணாளனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தமருக்குண்டு தாய்தந்தையர்க்குண்டு என்பது வெளிப்படையாம். இதனைத் 'தெரிந்துடம்படுதல்' என்னும் அகப்பொருட்டுறை வலியுறுத்தும்.

> "விரையக நாண்மலர் மெல்லியல் மாதை விரும்பினையேல்
> வரையக நாட வரைந்துகொள் நீதஞ்சை வாணன்முந்நீர்த்
> தரையக நான்மறைக் கேள்வியர் வேள்வியர் சான்றவர்தம்
> உரையக நாடிமுன் னிட்டன வாகு முலகியலே."

எனப் பாங்கி தன்னை யிரந்து நிற்கும் தலைவனுக்குக் கூறுதலையும் காண்க.

2. பாங்கியின் துணையால் முயலினும் ஒரோவொன்று இடையீடுபட்டு வருதலுமுண்டு. அவ்வாறு இடையீடுபட்டுழி வேட்கை நிறுத்தலாற்றாதார் புணர்ச்சி கருதி களவொழுக்கத்துக்கே பின்னும் முயல்வர். அவ்வாறு முயலினும் தமரை—தாய்தந்தையராதியரை - மறைத்த நிலையிலேயே ஒழுகலாற்றாது தலைவி வருந்துவாள். களவொழுக்கம் பன்னாள் நீடிப்பது கண்டு பழிக்கஞ்சுவாள். அவ்வாறு அஞ்சுபவள் தன் தோழியை நோக்கி,

> "தோழிநாம், காணாமை யுண்ட கடுங்கள்ளை மெய்கூர
> நாணாது சென்று நடுங்கவுரைத் தாங்குக்
> கரந்ததூஉம் கையொடு கோட்பட்டாம் கண்டாய்நம்
> புல்லினத் தாயர் மகன்சூடி வந்ததோர்
> முல்லையொரு காழுங் கண்ணியும் மெல்லியால்
> கூந்தலுட் பெய்து முடித்தேன்மன் தோழியாய்

வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்போடே
அன்னையு மத்தனு மில்லரா யாய்நாண
அன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ;
அன்னை வினவலுஞ் செய்யாள் சினவலுஞ் செய்யாள்
நெருப்புக் கைதொட்டவர் போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினள்; யானுமென்.
சாந்துளர் கூழை முடியா நிலந்தாழ்ந்த
பூங்கரை நீலந் தழீஇத் தளர்பொல்கிப்
பாங்கருங் கானத் தொளித்தேன்." (கலி: 115.)

என்றாள். அது கேட்ட தோழி அவளை அஞ்சலெனத் தேற்றி,

"சாரல், வாரற்க தில்ல தோழி கடுவன்
முறியார் பெருங்கிளை அறித லஞ்சிக்
கறிவளர் அடுக்கத்திற் களவினிற் புணர்ந்த
செம்முக மந்தி செல்குறி கருங்காற்
பொன்னிணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்றலைப் பாறுமயிர் திருத்தும்
குன்ற நாடன் இரவி னானே." (நற்: 151.)

என்று தலைவனுக்குக் கூறுவாளாய் அவளுக்குரைப்பாள். இதனால், 'தலைவி மெய்யுறு புணர்ச்சியை இப்பொழுது விரும்ப வில்லை' என்பதைத் தலைவனுக்குணர்த்துகிறாள் தோழி. களவொழுக்கத்தி லீடுபட்ட மகளிர், குறியிடத் தெய்த இடையீடு பட்டுழி இக்களவொழுக்கத்தால் பயனில்லையென்று கருதியும், தாம் எவ்வளவு மறைப்பினும் பிறர் அறிவரோ என்னும் அச்சத்தினும், தமர் தம்மை வீட்டைவிட்டு வெளியேக்லாகாதெனக் காத்த சமயத்தும், தம்மால் காதலிக்கப்பட்டாரை யன்றிப் பிறர் மணம் பேசவரின் அதனை மாற்றக் கருதும்போதும் குறியிடம் செல்லாது தம் காதலரொடு மெய்யுறு புணர்ச்சியை மறுப்பார். தலைவன் தம்மை விரைவில் வரைந்தெய்தவேண்டுமென்னும் விருப்புடையவர் மகளிர் ஆதலின், பகல் வருவானை இரவு வருக என்றும், இரவு வருவானைப் பகல் வருக என்றும், இரவும் பகலும் வாரற்க என்றும் கூறிக் களவொழுக்கம் நீடிக்கவிடார். தம் பெற்றோரிடம் தம் கருத்தையறிவித்துத் தம்மை வரைந்து கொள்ளவேண்டுமென்று தலைவனை வற்புறுத்துவார். தலைவன், தம் தமரிடத்து இரந்து குறையுற்றுவது தம்மை மணந்துசெல்ல வேண்டும் என்று எண்ணுவார். (ஐங்: 228) "அவனைநீ ஆயர் மகளிர் இயல்புரைத் தெந்தையும், யாயும் அறிய உரைத்தீயின் யானுற்ற, நோயும் களைகுவை மன்." (கலி: 111) என்றும், "உயர்மலை நாடற் குரைத்த லொன்றோ, துயர்மருங் கறியா அன்னைக் கிந்நோய், தணியுமா றிதுவென உரைத்த லொன்றோ, செய்யா யாதலிற் கொடியை தோழி, மணிகெழு நெடுவரை

யணிபெற நிவந்த, செயலையந்தளி ரன்னவென், மதனின் மாமைப் பசலையுங் கண்டே.'' என்றும் தலைவி தோழிக்குக் கூறுவாள். "தாய்தந்தையர் நம் நிலையுணர்ந்து நம்மாற் காதலிக்கப் பட்டவருக்கே நம்மை மணம் புணர்த்தல் வேண்டும்,'' என்னும் எண்ணம் மகளிருக்குண்டு என்பது இச்செய்யுட்க ளால் விளங்கும். காதலனோடு உடனுறை வாழ்க்கைக் கிடையூ றுண்மையால் தமர் அறியாது தலைவனோடு சென்றுவிடலாம் எனக்கருதி "உயர்மலை நாடற் குரைத்த லொன்றோ,'' எனக் கூறினும், 'அன்னைக்கு உரைத்தல்வேண்டும்,' எனத் தலைவி தோழியை வற்புறுத்துகின்றாள். அவள் இவ்வாறு கூறுவதால் தமர் அறியாது 'தலைவனொடு செல்ல விருப்பமில்லையென்பதும்' தமர் மறுப்பின் உடன்போக்குக்குத் தலைவி உடன்படுவாள் என்பதும் புலனும். காதலனோடு உடனுறைவை விரும்பும் தலைவி தாய்தந்தையர் தன்னை மணம்புணர்த்தல்வேண்டும் எனக் கருது கின்றாள். ஆதலின் மகளுக்குரிய மணாளனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தாய்தந்தையர்க்குண்டு என்பது வெள்ளிடைமலை யாம்.

3. களவொழுக்கத்துத் தலைவனொடு முயக்கம் உண்டாத லால் தலைவியது நெறித்த கூந்தல் பின்னுவிடப் பெறும்; புது மணம் கமழப்பெறும; மார்பில் சுணங்கரும்பும்; முலைக்கச்சுக் கடங்காது கண்ணுருத்தெழும். இவ்வேறுபாட்டினைக் கண்ட தாய் 'கட்டழகுடையாய்', எனக்கூறித் தன் மகளைத் தழுவுவாள். வேறுபாட்டினைப் பலமுறை நினைந்துநினைந்து மகளை இற்செறிப் பாள். இவ்வாறு இற்செறிக்குந் தாய் ஐம்பாற் சிறுபல் கூந்தற் போது பிடித்து அருளாது எறிகோல் சிதைய நூறுவதுமுண்டு. (நற்: 149) "சிலரும் பலரும் கட்கண் நோக்கி, மூக்கி னுச்சிச் சுட்டுவிரற் சேர்த்தி, மறுகிற்பெண்டிர் அம்பல் தூற்றச், சிறு கோல் வலந்தனள் அன்னை அலைப்ப, அலந்தனென் வாழி தோழி'' எனத் தலைவி தோழிக்குக் கூறியதாகக் கூறும். (அகம் : 145) ஆம் செய்யுளும் இக்கருத்தினையே வலியுறுத்து கின்றது. "அன்னை யறியின் இவணுறை வாழ்க்கை எனக் கெளிதாக வில்லென.........இளையோன் முன்னுறப் பன்மலை யருஞ்சுரம் போகிய'' என்னும் (அகம்: 203) ஆம் செய்யுளும் இதனையே வலியுறுத்துதல் காண்க. 'தன்சொல்லைக் கேட்காது களவொழுக்கம் விரும்பும் மகளைத் தாய்கோலகொண்டடித்தும் திருத்த முயல்வாள்,' என்பதால், தன் மகள் களவொழுக்கம் மேற்கொள்வதைத் தாய என்றும் விரும்புவதில்லை என்பதும் மகளுக்குரிய மணாளனைத் தேர்வதில் தாய்க்குப் பொறுப்புண்டு என்பதும் வெள்ளிடை மலை யன்றோ!

(தொடரும்)

# அன்னையின் ஆணை

[முத்தமிழ்மணி]

1. தித்திக்கும் பாலொடுதேன் குழைத்து மற்றும்
தீங்கரும்பின் நறுஞ்சாறு சேர்த்தளைந்த
முத்தமிழின் சுவைமறந்தோம்; முனைந்து நாட்டில்
முன்னுள்ள செயல்களெலாம் மறந்தோம்; என்றும்
உத்தமர்கள் வாழவழி வகுத்தோ மில்லை;
உயர்நீதி எந்நாளும் பேசிப் பேசி
எத்தனையோ அந்நியர்க்கு இடமே தந்தோம்;
இருளகற்ற உரிமைப்போர் தொடுப்ப தெந்நாள?

2. கோளரிகள் வாழ்ந்ததமிழ்க் குகையி லின்று
குறுநரிகள் புகுந்தங்கே புரையுண் டாக்கி,
எளனத்துக் கிடந்தந்த தாலே நாட்டில்
இருபிளவா யிற்றந்தோ என்செய் வார்சொல்!
ஆளவந்த பெருமக்கள் தாய்ப்பற் றில்லார்;
ஆணவத்தால் மெய்மறந்தார்; அறிந்த சில்லோர்
தோள்சேர்த்து வாள்தாங்கித் துடித்து நம்மின்
துயர்தீர்க்க உரிமைப்போர் தொடுப்ப தெந்நாள்?

3 காதலுக்கும் சாதலுக்கும் இடையில் நின்று
கருத்தழிதல் மக்கள்நிலை ஆமோ?—வல்லார்
மோதலுக்கும் முணுகலுக்கும் அடிமைப் பட்டே
முத்தமிழின் சுவைமறத்[illegible] நன்றே?—தீய
சாதனைக ளால்தமிழர் நலிவ தற்கோ
சாத்திரங்கள் பலப்பலவும் புனைந்தார் கீழோர்
வேதனைதா னென்சொல்வேன் வீணர் நம்மின்
வீறுகுறைத் திட்டார்கள்; வினைவி தைத்தார்.

4 விடவரவுக் கிடங்கொடுத்த தாலே நாட்டில்
விளைந்தபிள வைச்சேர்த்து ஒன்று கூட்டும்
மடங்கல்கள் நம்மிடையே இல்லை யந்தோ!
மனந்தளரா மறத்தமிழர் முன்வந் தாலும்
"உடன்பிறந்தோம் எல்லாம்;ஓ ரன்னை ஈன்றாள்
உய்வதற்கே எல்லோரும் உள்ளோம்," என்றே
கடன்பட்ட கல்நெஞ்சக் கூட்டத் தார்கள்
கரையாது உரைசெய்து வாழ்கின் றார்கள்.

5. என்றுபல சிந்தனையில் மூழ்கி அன்று
எழில்நிலவும் கவின்சோலை தனிற்புகுந்தேன்;
குன்றனைய நெடுந்தோளான் ஒருவ னென்முன்
குறைகழறு வான்போல உடல்த ளர்ந்து

நின்றிருகை கூப்பி, "உண்டு நெடுநா ளாச்சி;
நின்கையில் பணமிருந்தால் உதவி செய்வாய்,"
என்றுரைத்தான்; என்பையைத் தடவிப் பார்த்தேன்
இல்லையப்பா காசென்று கைவி ரித்தேன்.

6. "இல்லையென்று சொல்லுகின்றாய்?" என்ற வண்ணம்
என்னிருகன் னமதிரப் புடைத்துச் சென்ற
ஒல்லையிலே ஆண்டிருந்தோர் பிடித்தன் னை
ஓலமிடு மளவுக்குப் புடைத்து விட்டார்.
"வல்லைவல்லை இக்கொடுமை!" என்றி சைத்து
வானத்தைக் கிழித்துவரும் மதிமு கத்தாள்
"சொல்லியினிப் பயனில்லை; துடிக்கு துள்ளம்
சோதரனைப் புடைத்துவிட்டார்," என்றாள். மேலும்

7. "குருதியுடன் கலந்தஒரு தமிழர்க் கூட்டம்
கொண்டமனை யாள்பிள்ளைக் குழுவி னோடு
'உறுதியிலை இந்நாட்டில் வாழ்வ தற்கே
ஒண்டவந்த ஒருகூட்டம் நமது நாட்டில்,
கருதுசுய நலமென்னும் கற்க ளாலே
கருணையிலா நெஞ்சத்தோ டரண மைத்தார்;
இறுதியாய் நம்வாழ்க்கை அயல்நா,' டென்றே
ஏறிவிட்டார் நாவாய்கள்; இனி து வாழ்ந்தார்.

8. "உண்மையுட னுழைத்துயர்ந்த நமது மக்கள்
உயர்நிலையைக் கண்டபிற நாட்டா ரெல்லாம்
வண்மையுட னுரிமைப்போ ராற்றிப் பின்னர்
வழிகூட்டி யனுப்பிவிட்டார்; வளமி குந்த
தண்டமிழ்நா டாமவரின் தாய்நாட் டிற்கே
தளரா து வந்தடைந்தார்; ஆனா லன்னார்
எண்ணமெலா மீடேற வில்லை; வாழ்வும்
எரிதழலா யிற்றந்தோ என்செய் வார்கொல்?

9. "வாழ்விழந்த அவர்களெலாம் வழிகாணாமல்
வழிப்பறியே தம்செல்வ மாகக் கொண்டால்,
ஊழ்வினையென் றேசாற்றி ஒறுத்தல் நன்றோ?
உயர்கொள்கை யாமோ? உம் நெஞ்சம் கல்லோ?
பாழ்பட்டுப் போயிற்றே தமிழர் கொள்கை!
பரிந்தெழுவீர் தோள்புடைக்க! பகைவர் மாட்டு
ஆழ்ந்திட்ட உம்அன்பு அழிக! எந்தன்
அருமைமகார் வாழவழி அளிப்பீர்," என்றாள்.

# உடையார்கோவில் கல்வெட்டுக்கள்

[வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.]

## முன்னுரை

உடையார்கோவில் என்பது ஒரு சிவத்தலமாகும். இது தஞ்சாவூரிலிருந்து திருவாரூர்க்குப்போகும் இருப்புப்பாதையில் உள்ள சாலியமங்கலம என்னும் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே சுமார் ஒன்றரைமைல் தூரத்தில் இருக்கிறது. தஞ்சாவூரிலிருந்து மன்னார்குடிக்குப்போகும் பஸ் மூலமாகவும் இவ்வூரை அடையலாம். இஃது இக்காலம் உடையார்கோயில் என்று பெயர்பெற்றிருப்பினும, இதன் பழம்பெயர் திருவிற்றயர்ன்குடி ஆகும். இக்கோயிலில் முதலாம் இராசேந்திரன் (கங்கைகொண்ட சோழன்) முதலாம் குலோத்துங்கன் முதலான பல சோழமன்னர்களுடைய கல்வெட்டுக்களும், பாண்டியரில் குலசேகரனுடைய கல்வெட்டுக்களும் இருக்கின்றன. அவைகளை எல்லாம் கல்வெட்டுத்துறையாளர் படியெடுத்துச் சென்று அவைகளின் சுருக்கங்களை 1902-ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியிட்டுள்ளனர். அதன் பிறகு, இக்கோயிலின் பத்துக் கல்வெட்டுக்களின் மூலங்களைத் (Texts) தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதியில வெளியிட்டிருக்கின்றனர்.

பல ஆண்டுகளுக்குமுன்னர், இவ் வுடையார்கோயிலில் இருந்தவரும், நிறைந்த கிழவுததன்மையும், பலமொழிப் புலமையும பெற்றிருந்தவரும்ஆகிய திரு ம. அபபாசாமி ஐயர் அவர்கள், இக்கோயில் கல்வெட்டுக்களை எல்லாம் ஆராய்ச்சிசெய்ய வேண்டுமென்று என்னை வேண்டினார்கள். அக்காலங்களில் இடைவிடாத அலுவல்களால் என்னல் முடியாதுபோயிற்று. ஐயர் அவர்களும் இறைவன் திருவடிநீழல் அடைந்தனர். இப்பால், ஐயர் அவர்களின் அருமைமகனுய், தஞ்சையில் வழக்குரைஞராய் இருந்துவரும், திரு. C. A நாராயணசாமி ஐயர் அவர்கள், உயர்திரு. வடிவேற்பிள்ளை B. A., L T., (D E. O. TanJore District Board) அவர்களால் என்னை அறிந்து அக்கல்வெட்டுத தொண்டில் ஈடுபடுததினர். யானும் உடையார்கோயில் சென்று, இரண்டுநாட்கள் தங்கியிருந்து, தென் இந்திய கல்வெட்டுத் தொகுதிகளில் வெளிவராத கல்வெட்டுக்களையும் படித்து இச்சுருக்கததை எழுதினேன். எழுதுங்கால் உடனிருந்து எனககு வேண்டுவனவற்றைக் குறைவறச் செய்தருளிய இக்கோயில் பொறுப்பாளர் (Trustee) உயர்திரு. A K. அண்ணாமலைத் தென்கொண்டார் அவர்களின் அன்புடைமையைப்

பெரிதும் பாராட்டுகின்றேன். இச்சுருக்கம் ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமென்று, நம் செல்வியில் வெளியிடலானேன். திரு. ம. அப்பாசாமி ஐயர் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றிய திருவருளை வழுத்துகின்றேன்.

## ஊரின் பழைய பெயர்

இக்காலம் உடையார்கோயில் என்பது இவ்வூரின் பெயராய் இருப்பினும், பழங்காலத்தில் இவ்வூர், திருவிறையான்குடி என்றே வழங்கப்பட்டுள்ளது. இச் செய்தி, "நம்மூர் திரிபுவனமாதேவிப் பேரேரியுள் எழுந்தருளியிருக்கும் திருவிறையான்குடி திருக்கிளாவுடைய மகாதேவர் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு நாங்கள் இறையிலி செய்துகொடுத்த நிலமாவது,"—என்னும் கோவிராஜகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவரின் நான்காம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. ஈண்டுக் குறிக்கப்பெற்ற சோழமன்னன் "பூமன்னு பதுமம் பூத்த"—என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியை உடையவன் ஆவன்.

மேலும், இச்செய்தி கோவிராஜகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராஜாயிராஜ தேவரின் (மூன்றாம் இராஜராஜ சோழமன்னனின்) பத்தாம் ஆண்டுக் கல்வெட்டாலும் உறுதி எய்துகின்றது.

## ஊரின் பழமையும் பெருமையும்

இக்காலம் கோனேரிராசபுரம் என்று வழங்கப்பெறும் திருநல்லம் என்னும் பதியிலுள்ள தேவாரம பெற்ற கோயிலைக் கற்றளியால் எடுப்பித்தவர், கோயில் (சிதம்பரம்) திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழ தேவருடைய பிராட்டியார் செம்பியன்மாதேவியார் ஆவர்.

அக்கோயிலில் உள்ள உடையபிராட்டியார் செம்பியன் மாதேவியார் வெண்ணாட்டுத் திருநல்லத்து மகாதேவர் கோயில், "ஸ்ரீ கண்டராதித்தன என்னும் திருநாமத்தால் திருக்கற்றளியாகச் செய்வித் தருளுகின்றார்"—என்று தொடங்கும் கல்வெட்டில் காணப்பெறும் "புரவுவரி இறையான்குடித் தலைமகன் தண்டிபூதியான செம்பியன் உத்தர மந்திரியும" என்னும் பகுதியில் [South Indian Inscription, Volume III, Part III, Inscription Number 151, line 15] இவ்வூர் குறிக்கப்பெற்றுள்ளது. இக் கல்வெட்டின் காலம் மேற்குறித்த கண்டராதித்த சோழ தேவரின் திருமகனார் மதுராந்தக தேவரான உத்தமசோழ

தேவர் காலத்தது ஆகும். எனவே உத்தமசோழன் காலத்துக்கு முன்னரே இவ்வூர் இருந்துள்ளதென்பதை அறிகின்றோம்.

மேல்குறித்த குலோத்துங்கசோழ தேவர், இராஜராஜ தேவர் காலங்களின் கல்வெட்டுக்களில் இவ்வூரின் பெயர்முன் திரு என்ற அடைமொழி கொடுக்கப்பட்டதிலிருந்து இவ்வூர் பெருமைவாய்ந்தது என்று பெறப்படுகின்றது.

## உடையார்கோயில் என்று பெயர் வழங்கப்பெறுவதன் காரணம்

இவ்வூர் உடையார்கோயில் என்று பெயர் வழங்கப்பெறுவதற்குக் கல்வெட்டுக்களில் ஆதாரம் இலது எனினும் இக் கோயில் கல்வெட்டுக்களில் காணப்பெறும் "உடையார் திருக்கிளா உடையார்கோயில் ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு"—என்னும் இத்தொடரில், முதலில் காணப்பெறும் உடையார் என்னும் சொல் மரியாதை மொழியாகும். திருக்கிளா உடையார் என்பது சிவபெருமானின் திருப்பெயராகும். திருக்கிளா உடையார்கோயில்—என்பதில் உள்ள உடையார்கோயில் என்ற தொடரின் பெயராலேயே பிற்காலத்தில் இவ்வூரின் பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும்.

## கோயிலின் பழமை

சோழ மன்னர்களது புகழுக்கு நிலைக்களமாய் விளங்கும் தஞ்சைப் பெரியகோயிலாகிய இராசராசேச்சரத்தை எடுப்பித்த முதலாம் இராசராச மன்னனின் அருமை மகனாகிய முதலாம் இராசேந்திரன் அல்லது கங்கைகொண்ட சோழனின் முப்பத்தொன்றாம் ஆண்டில் பொறிக்கபபெற்ற கல்வெட்டே, இக் கோயிலில் மிகப பழமையானதாகும். அக்கல்வெட்டின் காலம் கி பி. 1014+31=கி. பி. 1045 ஆகும். எனவே இற்றைக்கு 905 ஆண்டுகளுககு முன்னரே இக்கோயில் கற்றளியால் ஆக்கப்பட்ட பழமையானதாகும்.

## கோயில் நிலைபெற்றுள்ள இடம்

மேற்குறித்த கங்கைகொண்ட சோழனது கல்வெட்டில் காணப்பெறும் "நம்மூர் திரிபுவனமாதேவிப் பேரேரி உள்ளால் எழுந்தருளியிருந்த திருக்கிளாஉடையார் மகாதேவர் கோயில்,'—என்னும் தொடரால் இக்கோயில் ஏரியின் நடுவுள் இருந்தது என்றும, அவ்வேரியின் பெயர் திரிபுவனமாதேவிப் பேரேரி என்றும பெறப்படுகின்றன. இன்றும் அந்நிலையில் கோயில் இருப்பதைக் காணலாம். ஆனல் போக்குவரவுக்குக் கோயில் வரை அதன் நடுப்பகுதியில் சிறிதுபாகம் தூர்க்கப்பட்டிருக்கின்றது.

## இறைவர் திருப்பெயர்

இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் திருக்கிளாஉடையார், திருக்கிளாஉடைய நாயனர், நாயனர் திருக்கிளாஉடையார், உலகுடைய பெருமாள் என்னும் திருப்பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

## இறைவரின் திருந்திய பெயர்

இக்கோயில் கல்வெட்டுக்கள் எல்லாவற்றினும் இறைவர் திருக்கிளாஉடையார் என்றே அழைக்கப்படுகின்றனர். இதில் கிளா என்பது தலத்துக்குரிய மரமாகும். இது களா என்றே இருக்கவேண்டும். ஏனெனில் தமிழுக்கும் சைவத்துக்கும் அருந்தொண்டாற்றிய யாழ்ப்பாணத்துநல்லூர், உயர்திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் தாம் பதிப்பித்துள்ள நூல்களில், இம்மரத்தைப்பற்றிக் கூறவந்தகாலை களா என்றே குறித்துள்ளனர். எனவே திருக்களாஉடையார் என்பதே திருந்திய பெயராகும்.

## இறைவரைப்பற்றி வழங்கும் வரலாறு

"ஆதிசண்டேஸ்வரன் ஆதேசம். நாயனர் திருக்கிளாஉடையார் உலகுடையபெருமாளுக்கு நன்றாகப் பூசைகொண்டருளுகிற நாயனர் கதையாலே பிடமாயிருந்தமைல்"—என்னும் இக்கோயில் கல்வெட்டுப்பகுதியால் நாயனர் ஒருவர் இறைவனை நன்றாய்ப் பூசித்துவந்தார் என்று அறிகின்றோம்.

## எழுந்தருளுவிக்கப்பெற்ற பிரதிமங்கள்

கோவிராஜகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசேந்திரசோழதேவர் காலத்தில் இத்திருக்கோயில், தேவர் அடியார் பூமி திருவுடையார் திருவேகம்படிநங்கையார் என்பார் ஆளுடைய பிள்ளையார், திருநாவுக்கரசு சுவாமிகள், ஆளுடைய நம்பியார், பரவைப் பிராட்டியார், இவர்களின் பிரதிமங்களை எழுந்தருளுவித்துள்ளார்.

## எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனிகள்

இவ்வம்மையாரே இக்கோயிலில் உள்ள பெரியதேவரையும் நாச்சியாரையும், உமாபரமேஸ்வர தேவரையும் அவரின் நாச்சியாரையும் எழுந்தருளுவித்துள்ளார்.

## திருவிழாக்கள்

முதலாம் இராசேந்திரன் அல்லது கங்கைகொண்ட சோழனின் முப்பத்தொன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் காணப்பெறும் "இத்தேவர்க்குத் திருவிழாப்புறத்து வரிவஸ—ல் செய்துகொடுத்

தோம்'' (வரி: 24) என்னும் தொடராலும், திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசேந்திரசோழ தேவரின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் காணப்பெறும் "திங்கள் திருநாள், ஆட்டைத் திருநாள்களுக்கு குடிமைக்கு மரத்தால் முக்குறுணியாக வந்த நெல்லு தரவிருநெல்லோடே கூட்டிச் சிலவாக்குவதாகவும்'' —(வரி: 19) என்னும தொடராலும்,

"பூமருவிய திருமாதும் ஜயமாதும் நாமருவிய கலைமாதும் பகழ்மாதும் நயந்துபுல்க''—என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராஜராஜதேவரின் ஆறாவது ஆண்டுக் கல்வெட்டில் காணப்பெறும் "இத்தேவர் திருநாட்களில் யாகமண்டபத்துத் தேவர் எழுந்தருளியிருக்கப் பண்ணவும''—என்னும் தொடராலும் இக்கோயிலில் மாதந் தோறும விழாவும், ஆண்டுதோறும் பெருந்திருவிழாவும் நடைபெற்றுவந்தன என்று அறிகின்றோம். (தொடரும்)

---

## தமிழனும் நீகொலோ?

[நாஞ்சில், கா. கணபதி.]

அன்பும் அமைதியும் ஆக்கமும் பயின்ற
பண்பமை நீடிய தமிழனும் நீகொலோ?
எங்கண் செல்லினும் பெறுவது வெற்றியே
என்றிறு மாந்த தமிழனும் நீகொலோ?
பங்கயச் செல்வி பாண்டிமா தேவியின்
செஞ்சொ லுறுதியும் செவ்விய நோக்கமும்
பரவுமா றுதவிய தமிழனும் நீகொலோ?
உலவும் மயிலின் உறுதுயர் காணு
ஆடையொன் றீந்தப் பீடுறு வண்மை
பின்னுள மாந்தரும் அவ்வழி பற்ற
நன்னெறி காட்டிய தமிழனும் நீகொலோ?
செருக்கும் சினமும் அழுக்கென் றகற்றி
உலகமே பெறினும் நிலைகெடு வழிவரு
பொருள்நீத் தெவர்க்கும் ஒப்புர வாறறி
மன்பதை போற்றும் வாழ்க்கை வாழ்ந்து
முந்துறக் காட்டிய தமிழனும் நீகொலோ?
நீகொலோ? நிலைத்தசெந் தமிழனும் நீகொலோ?

---

# செய்திகளும் குறிப்புகளும்

## பேரிடர் நீங்கிப் பெருநலமுறல்

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், அப்பர் அச்சகம் முதலிய அரும் நிலையங்களின் ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளையவர்கள் தமிழ் வளர்ச்சிக்கழக நான்காவது ஆண்டுவிழாக் காண்பதன்பொருட்டு யாழ்ப்பாணம் சென்றுள்ளார்கள். இயல்பாகவே அவர்கள் நொடிப் பொழுதும் தாம் மேற்கொண்டுள்ள பொறுப்புப்பணியை விட்டகலும் எண்ணம் இல்லாதவர்கள்; ஒருப்பாடும் இல்லா உரனுடையுள்ளத்தர். இன்றியமையாது செல்ல நேரிடும்பொழுதும் சுருங்கிய கால எல்லையில் சென்று மீளும் திறலினர். தமிழ் வளர்ச்சிக்கழகத்தலைவர் திரு. சு. அவினாசி லிங்கம் செட்டியாரவர்களின் மறுக்கமுடியா வற்புறுத்தலினாலேயே போக ஒருப்பட்டனர்; போந்தனர்.

அவர்கட்கு எதிர்பாராத நிலையில் 3-5-51-இல் வெப்புநோயுற்றது. ஏறத்தாழ ஒரு திங்கள் காறும் பெரிதும் வருந்தினர். அறநிலை திறம்பா மெய்ம்மையாளரின் நிறமுறு நீர்மை பேரின்னலினின்றும் பெருமானருளால் பிழைத்துச் சீருறுவதாலேயே விளங்கும். அத்தகைய நிகழ்ச்சியே இவர்கள்பாலும் நிகழலாயிற்று. இவர்கள் செந்தமிழ்க்கும் செந்நெறிக்கும் சிறப்புறச் செய்துவரும் திருத்தொண்டே தலைகாத்தது என்க. எவரும் அஞ்சும் இந்நோய்க்கு யாழ்ப்பாணத்து இமையனைய நண்பர்கள் ஒரு சிறிதும் அஞ்சாது வேண்டுவன உடனிருந்து செய்துபோந்த உரனுடைமை போற்றற்பாலதே. இஃது "இடுக்கண் களைவதாம் நட்பு" என்னும் இயன்மொழியின் ஏற்றம் தோற்றுவித்ததாகும். இப்பொழுது முற்றும் குணம் எய்தியுள்ளார்கள். 15-6-51 இல் திருநெல்வேலி திரும்புவார்கள். பண்டுபோல் வல்லா உரமும் நலமும் எய்த ஆண்டவனருளை வேண்டுவோமாக.

## தூத்துக்குடி சைவசித்தாந்த சபை 67-வது ஆண்டுவிழா

விழா நாளிது மே—12, 13-ஆம் நாட்களில் சிறப்புற நிகழ்ந்தது. ஈரோடு கலைமகள் கல்வி நிலைய ஆணையாளர் திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் B.A., L.T. அவர்கள் விழாப் பேரவையின் தலைமை தாங்கினார்கள். திருமுறை ஓதலும், ஊர்வலமும், திருக்கோவில்வழிபாடும் சிறப்புற நிகழ்ந்தன. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக உறுப்பினரும், சித்தாந்த சைவ புராணிகருமான குலசைத் திரு. ச. முத்துக் குமாரசாமிப்பிள்ளை அவர்கள் பேரவையைத் தொடங்கி வைத்தார்கள். திரு. வெண்ணிமாலைப் பிள்ளை (அட்வகேட்) அவர்கள் வரவேற்று அவைத் தலைவரவர்களைத் தலைமைதாங்க வேண்டிக்கொண்டனர். திரு. V. S. சண்முகம் பிள்ளையவர்கள் வரவேற்பு இதழ் படித்தளித்தார்கள்.

திருவாடுதுறை ஆதீன சொற்பொழிவாளர் அம்பாசமுத்திரம் திரு. ஆ. முத்துக்குமாரசுவாமியா பிள்ளையவர்கள், கொடுமுடி 'முத்தமிழ் வித்தகி' திரு. K. A. முத்துலட்சுமியம்மையார், 'சித்தாந்த கலாநிதி' திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், புரிசை திரு. சு. முருகேச முதலியாரவர்கள், அரும் பெரும் பொருள்கள் பலபற்றி விரிவுரையாற்றினார்கள்.

இரண்டாம்நாட் காலை புரிசை. திரு. சு. முருகேச முதலியாரவர்கள் 'சைவ இலக்கியங்கள்' என்பதுபற்றிப் பேசினார்கள். மாலையில் சென்னை திரு. C. திருநாவுக்கரசுப் பிள்ளையவர்கள், ஔவை. சு. து. அவர்கள், திரு. C. E. நாயகம் பி.எ. அவர்கள், 'சித்தாந்த வித்தகி' C. S. ஈசுரவடிவம் மாள் அவர்கள் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். 'முத்தமிழ் வித்தகி' திருமதி, கொ. அ. முத்துலட்சுமி அம்மையாரவர்கள் 'சிவநெறி யிற் சிலமகளிர்' என்னும் பொருள்பற்றித் துணைக்கருவிகளுடன் தனிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவைத்தலைவரவர்கள் தலைமையுரை, கருத்துரை, முடிப்புரை முதலியன அழகுறப் பேசி அவையை அணி செய் துள்ளார்கள். வாழ்த்தும் நன்றியும் வழங்க விழா இனிது நிறைவுற்றது. ஆயிரக்கணக்கான ஆடவரும் மகளிரும் விழாவிற் கலந்துகொண்டனர்.

## சேக்கிழார் திருநாள்—தேவகோட்டை

இத்திருநாள் 6, 7, 8-6-51 மூன்று நாட்களும் தேவகோட்டை நகரச் சிவன் திருக்கோவிலின்முன் அமைக்கப்பெற்றுள்ள முருகவேள் சதுக்கத் தில் சிறப்புற நிகழ்வதாயிற்று. திருவாளர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தலைமை தாங்கினர். திரு. சு. ஆவுடையப்ப தேசிகர் அவர் கள், திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள், வித்துவான் வை. சு. தண்டபாணி அவர்கள், கொத்தமங் கலம் M. SP. சண்முகம், M. A. அவர்கள், திருவையாறு க. சேதுராமலிங் கன் அவர்கள், திருவையாறு அரசர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பேராசிரி யர் இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், பாலூர், ந. மு. சுப்பராய முதலியார், தமிழ்வேத தலயாத்திரைப் படஆசிரியர் அவர்கள், சென்னை கி. வா. ஜெகந்நாதன் அவர்கள், திருக்கோகர்ணம் சி. பிருந்தாதேவியார் அவர்கள், வயிநாகரம் இராம. மீனாட்சி அவர்கள், சென்னை அ. ச. ஞான சம்பந்தன் M. A. அவர்கள், திருப்பனந்தாள் கல்லூரி முதல்வர் K. M. வேங்கடராமையா B. O. L. அவர்கள், மதுரை ஆதீனம் திருப்புறம்பயம் மாணிக்கவாசகத் தம்பிரான் அவர்கள் முதலிய அனைவரும் சேக்கிழார் நூலகத்துப் பொருள்களே பொருள்களாகப் பேசிய சீர்மை மிகவும் பாராட் டற்குரியது. இரவு சேக்கிழார் திருவுலாவும், யானைமீது திருமுறை ஊர்வலமும் மிக்க சிறப்பினவாய் நிகழ்ந்தன. இம்முறை சேக்கிழாரடிகளின் தெய்வநலம் தேயமெல்லாம் செழிக்கச் செய்து, நாடும் மொழியும் வளமுறச் செய்யும் நல்லதோர் முற்படியாகும்.

## திலகவதியார் மாதர் கழகம்—தூத்துக்குடி

இக்கழகத்தின் ஆறாவது ஆண்டு விழா 10-6-51 ஞாயிற்றுக்கிழமை யன்று நிகழும். 'சித்தாந்த கலாநிதி' திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை யவர்கள் தலைமை தாங்குவார்கள். காலையில் திருமடாலயத்தில் திலகவதி அம்மையார், திருநாவுக்கரசு நாயனார் இவர்களுக்கு வழிபாடு நிகழும். மாலை கழகச் சிறுமியர், அம்பலவாணர் வழிபாடு செய்வர். திருமதி அ. இசக்கியம்மாள், தாழையூத்து சங்கர், கணபதி மில்ஸ் லிமிடெட்., அவர்கள் பேரவையைத் தொடங்கிவைப்பார்கள். திருமதி. கு. மங்கையர்க்கரசி அம்மையார் வரவேற்பு வழங்குவர். 'கடவுள் ஒருவர் உண்டு' என்னும் பொருள்பற்றி வினாவிடை செல்வி. S. கோமதியும், P. சுப்புலட்சுமியும் நிகழ்த்துவர். காரைக்காலம்மையாரின் அருட்செல்வம் தலைவரவர்களால் பேசப்பெறும். 'சித்தாந்த வித்தகி' திருமதி C. E N ஈசுரவடிவம்மையா ரவர்கள், திருவாடுதுறை ஆதீன சொற்பொழிவாளர், தூத்துக்குடி, திரு

ஞானசம்பந்தர் உபநயனமும், திருஐந்தெழுத்துப் பதிகமும் பேசுவர். மங்கையர்க்கரசியார் என்னும் பொருள்பற்றிக் குடந்தை, திருமதி. கை. சிவானந்தவல்லி அம்மையாரவர்கள B. A. (Hons) பேசுவார்கள். திருவருள் வலத்தால். அவைத்தலைவர் நீங்க ஏனையாரெவரும் பெண்பாலராகப் பங்கெடுத்துத் தொண்டுஞற்றுவது மிகமிகப் பாராட்டத்தக்கது. "திலக வதியார் திருவருளால் மேன்மேல், உலகுய்யத் தொண்டியற்றும் ஓர்ந்து."

## திருப்புகழ், திருமுறை மாநாடு—பழனி

ஒன்பதாவது மாநாடு மே 16, 17 ஆம் நாட்களில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. இடம் கணபதி இராமலிங்க நிலையம். பேரவையைத் திருப்புகழ்மணி குகத்திரு T M. கிருட்டினசாமி ஐயரவர்கள் திறந்து வைத்தார்கள். திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளையவர்கள் தலைமைதாங்கினார்கள். அறிஞர் பலர் சொற்பொழிவு செய்தனர். அவர்களுள் ஆசிரியை திரு. R. இராசரத்தின அம்மையார் எம். ஏ. எல். டி. 'சங்ககாலச சைவம்' என்பதையும், குகத்திரு. கிருபானந்தவாரியார் 'திடமலி' என்பதுபற்றியும் விரித்துரைத்தார்கள்.

இரண்டாம் நாள் திருமுறை மாநாடு. தலைவர், கோவை அரசியற் கல்லூரி முதல்வர் திரு. A. இராமநாத பிள்ளையவர்கள். சொற்பொழிவாளர், திரு. ஆசிரியர் இளவழகனுர் அவர்கள், டாக்டர் M. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள், ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள், அ. மு. சரவண முதலியாரவர்கள், தொண்டன் ஆசிரியர் K. ஆறுமுக நாவலரவர்கள் முதலியோராவர்.

மே 18, இவ்விழாவையொட்டி இரண்டாவது திருக்குறள் மாநாட்டை கோவை பேராசிரியர் திரு. A. இராமநாத பிள்ளையவாகள் திறந்து வைத்தார்கள். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் R. P. சேதுப் பிள்ளையவர்கள் தலைமை தாங்கினார்கள். திருக்குறளைப்பற்றிய சொற்பொழிவுகளும், டாக்டர் நாராயணசாமி நாயுடு அவர்களின் திருக்குறள் அட்டாவதானமும் நிகழ்ந்தன. திருமுறை, திருக்குறள் யானைமீது ஊர் வலம், விருந்து, பரிசு முதலிய பிறநிகழ்ச்சிகளும் சிறப்பாக நிகழ்ந்தன.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

## மறைமலையடிகள்

### புலவர் அரசு

மறைமலையடிகள் ஒரு கல்விக்கடல். அதன் நிலையறிந்தார் யாருமிலர். அவர்கள் வாழ்வே தமிழ் இலக்கிய காலத்தின் புரட்சிகரமான ஒரு வரலாறாகும். எனவே, அவர்கள் வாழ்வையும் பணியையும் ஓரளவாவது அனைவரும் உணர்ந்து தமிழ்ப் பற்றும் தமிழறிவும் மிக்காராய் வாழ்வதற்குத் துணை செய்வதற்.காக இந்நூல் வெளியிடப் பெறுகின்றது. அடிகளின் பலவகை நிழலோவியங்களுடன் அமைந்தது.

மலிவுப் பதிப்பு ரூ. 2—4—0 உயரிய பதிப்பு ரூ 3—4—0

## நல்லொழுக்கப் பாடம்

### எஸ். சகதேவ முதலியார் அவர்கள்

நல்லொழுக்க முறைகளை விளக்கி, அவற்றிற்கு மேற்கோளாகக் கதைகளும் சொல்லித் தெளிவு படுத்துவது. சுவையான கதைகளின் வயமாய் நின்று நல்லொழுக்க நெறிமுறைகளைத் தெளிவுற அறிந்து பயனடையலாம். ஒவ்வொரு சிறுவர் சிறுமியரிடமும் இன்றியமையாதிருக்கவேண்டிய நூல்.

விலை ரூ. 1—4—0

## நல்லொழுக்க வினாவிடை

### கழகப்புலவர் ப. இராமநாத பிள்ளை அவர்கள்

நல்லொழுக்கங்களையும் அறிவுரைகளையும் வினாவிடை முறையில் இள மாணவர்க்கு அறிவுறுத்துவது. கல்வி நிலையங்களில் ஒழுக்கப்பாட (Moral class) வகுப்புக்கு வைப்பதற்குப் பெரிதும் ஏற்புடையது. கையடக்கமான பதிப்பு.

விலை ரூ. 0—8—0

## இளங்கண்ணன் நினைவு மலர்

### இளங்கண்ணன்

இளங்கண்ணனார், ஆசிரியத்துறையில் சிறந்து ஒரு பயிற்சிக் கல்லூரியின் தலைவராக விளங்குபவர். அவர்கள் வாழ்வில் அவர்கள் குடும்பத்தையும் அவர்களையும் சுற்றி நடைபெற்ற உண்மைச் செய்திகள் இந்நூலின்கண் நுவலப்படுகின்றன.

விலை ரூ. 1—12—0

பதிவு எண் 4869

## மகளி[illegible]ல்லம்

[illegible]ண்டிதை எஸ். கிருஷ்ணவேணியம்மையார்

இந்நூ[illegible] மகளிர் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் வாழ்ந்து வருகின்ற, [illegible]ழவேண்டும் முறைதுறைகளைப் பற்றியதாதலால், மாணவியர் [illegible]னைவரும் இந்நூலினைத் தவறாது கற்றல்வேண்டும். மாணவியர் [illegible]டுதிக் கண்காணிப்பாளர்கட்குச் சிறந்தவழிகாட்டியாகவும இ[illegible]நூல் விளங்கும்.

விலை ரூ. 2—0—0

## அறிவுலக மேதை பெர்னார்டுஷா

கா அப்பாத்துரைப் பிள்ளை M A, L,T.,

மாணவர் முதல் சீர்திருத்தத்திறலோர் ஈறாக அனைவரும் கற்றுணர்ந்து பயன் எய்துவதற்கு ஏற்ற நூல். இதன்கண் பெர்னார்டுஷாவின் விரிந்த வரலாறு தக்க சான்றுகளுடன் இனிதே விளக்கப்பட்டுள்ளது. இனிய எளிய நடையுடன் திட்பநுட்பம் செறிய அழகிய பதிப்பாக வெளிவந்துள்ளது.

மலிவுப் பதிப்பு ரூ. 1—12—0 பரிசுப் பதிப்பு ரூ. 2—8—0

## திருமாவளவன்

மா. கோவிந்தன் அவர்கள்

மன்னர்களிற் சிறந்த கரிகாற் சோழன் வரலாற்றை பண்டைக்கால இலக்கியச் சான்றுகள் கொண்டு விளக்குவது; புலவர் வரலாறு, நாட்டு வரலாறு, பழங்கால நிகழ்ச்சிகள் முதலியன வற்றைத் தெள்ளத் தெளிய வடித்துக்காட்டுவது. இதுபோன்ற உ[illegible]பரிய நூல்கள் நம்நாட்டு இளைஞர்கள் கற்று மேனிலையெய்த வழிகாட்டுவதாகும். ஆகவே, கண்[illegible] வனப்புமிக்க மேலட்டையுடன் இது நல்ல அமைப்புக்கொண்டு விரைவில் வெளிவரும்.

## தெனாலி ராமன்

முத்தமிழ்மணி

மக்கட்கு இன்பூட்டுவது நகைச்சுவை; நகைப்புக்கு இடனாக மிளிர்வது தெனாலிராமன் கதைகள்; அதைத் தூய செந்தமிழ் நடையில் நாடகமாகப் புத்தம்புதிய நற்கருத்துக்கள் மிளிர கழகப் புலவர் [illegible] றப்பி[illegible]ரான திரு. முத்தமிழ்மணி எழுதியுள்ளார். விரை[illegible] [illegible]வளி[illegible]ம்.